KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ௵ ஜூலை ௴ 18 ௳ [No. 28

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 433

2. ஒத்தெல்லோ (அங்கம் 3. களம் 3.)
Shakespeare's 'Othello' 435

3. கம்பராமாயணம் (நாடவிட்ட படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 438

4. நம்மாழ்வார் வைபவம் (8-ம் பத்து, 1-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 441

5. கலித்தொகை (மருதக்கலி 10, 11, 12)
T. A. கனகசபாபதி முதலியார் 443

6. அணியிலக்கணம்
உடனிகழ்ச்சியணி 446

7. வர்த்தமானம் 448

## கலாநிலயம்

### வித்தகமோ விதிவசமோ 2.

இன்பதுன்பங்கள் விதிவசத்தால் விளைகின்றனவேயன்றி நம்முடைய வித்தகத்தால் துய்க்கவும் விலக்கவும் வல்லன அல்லவென் றெண்ணல் எத்திறத்திலும் ஏற்றதொன் றன்று. புறத்தினின்று நம் உடலினுக்கு வரும் ஊறுகளை ஒருகால் நாம் தடுக்க மாட்டாதவர்களாகலாம். கொடியநோய்களும் நினையாத விபத்துக்களும் நேர்ந்து உடலிற்குத் துன்பமேனும் உயிரிற்கு இறுதியேனும் உண்டாகுமது ஒரோவழி நம்முடைய மதியினால் காக்கவல்லன ஆயினும், எல்லாக் காவல்களையுங்கடந்து அவைதாம் நம்மைத் தொடர்கின்ற தன்மையைக் காண்கின்றோமாதலின், விதிப்படியே விளைந்தனவென்னக் கொள்வதல்லால் வேறுவகையில் விளம்புவதற்குஇல்லை.எனினும்என்! உடல்நோயு மரணமும், உண்மையே நோக்குங்கால், ஒருவனது சரித்திரத்தில் மிகச் சிறு விடயங்களே. உடல்நோய்களெல்லாம் இடைப்பிறவரல்கள்; மரணமும் அவன் சரித்திரத்தில் ஓர் 'அத்தியாயம்' முடிவடைகின்றதென்பதைக் காட்டுவதல்லால் வேறன்று. நோய் செய்வது துன்பம்; மரணம்துன்பங்களின் கழிவாக இருப்பினும் இருக்கலாம். மற்று மாரிஸ் மேடர்லிங்க் உரைக்கின்றபடி இக்காலம் ஆங்காங்கு ஒவ்வோர் நோய் ஒவ்வொரு மனிதனைத் துன்புறுத்துகின்றதென்னின், துன்பமே மனிதரென் றிருப்போரையெல்லாம் பற்றியுள நோயாக இருக்கின்றதே: இவ்வாறு இருக்கவே வேண்டுமென்பதுதான் கடனோ, அல்லது வேறுதான் நெறியுண்டோ! விதியின் வன்மையாலோ அல்லது நம் மதியின் புன்மையாலோ இந்நிலை வந்திறுத்தது?

இவ் வரிய ஐயத்தினைத் தீர்த்துக்கொள்வதன்முன் மறக்கலாகா ஒரு இரகசியத்தை நாம் உட்கொள்ள வேண்டும். நம்முடைய தன்மையே போன்றதல்லாத தொன்றும் நமக்கு நேர்ந்திடாது. இதன் பொருள் யாதெனச் சிலர் தாழலாம். பின்வருவன இதன் உட்கருத்தை விளக்குவனவாகும். நம்முடைய தினப்படி நினைவுகளின் உருவத்தையே நமது ஆன்மாக்களுக்குக் கொடுத்துத் தோற்றுவிக்கும்படி நம்மை வந்தடைந்த செய்திகளெல்லாம் முடிகின்றன. வீரம்பெரிதுடைய செயல்கள் ஒருவன் செய்தானெனின், ஒருமுறை அவன் அதனைச் செய்வதன்முன் பன்முறை வீர எண்ணங்கள் எழூந்தெழூந் தமர்ந்த வாழ்க்கையனாயிருந்திருத்தல் வேண்டும். மலைமீது ஏறினாலும், காடுகளிற் றிரிந்தாலும், வீடுதோறுஞ் சென்றாலும், தன் மனையின் கூடத்தில் நடந்தாலும், உலகத்தைச் சுற்றித் திரிந்தாலும், விதியின் நெடிய பாதையில் தன்னையேயன்றி வேறெவரையும் ஒருவனுஞ் சந்திக்கமாட்டான். சிபி சக்கரவர்த்தி இன்றையதினம் வெளியிற் புறப்பட்டானாயின் இன்னொரு சிபியினிடத்திற்கே அவனுடைய கால்கள் அவனைச்செலுத்தும்.மறுதலையில்இவனைஎற்றற்குப் புறவொன்றுவிரைவுடன் எதிருறத் தோன்றாமற் போகாது. வசிட்டமுனிவர்

தன்வீட்டுக்கதவைத் திறப்பாரெனின், வசிட்டமுனிவரே தன்வீட்டுத் திண்ணையின்கண் நிட்டையிலிருக்கக் காண்பார். மெய்யறிவு பெருகுதற்கு ஓர் சந்தர்ப்பம் இங்கும் ஏற்படும். இதற்கெதிரே, சகுனி புறப்பட்டானானால் அவன் செல்லுமிட மெல்லாம் சகுனிமார்களையே சாலச் சந்தித்துக்கொள்பவனாவான். அவன் காணுமிடமெல்லாம் கவறுருடுகருவிகளே கிடைக்கும். மற்றவரை வஞ்சனையால் வென்றழித்தற்குரிய வசதிகள் அவனுக்கு வாய்க்காமற்போகா. இன்னவாறு, நம்மோடு ஊடாடிவருகின்ற மனிதர்களும் விடயங்களும் நம்மகத்தே பலகால் தோன்றித்தோன்றி உரம்பெற்ற எண்ணங்களின் உருவங்களே யன்றிப் புறத்தினின்று புதிதாய் வருஞ் செய்திகளே என்று முற்றிலுங் கொள்வதற்கில்லை. இவ்வுண்மையையே முன், 'நம்முடைய தன்மையே போன்றது அல்லாத தொன்றும் நமக்கு நேர்ந்திடாது" என்னும் வாக்கியத்தால் குறிக்க நினைத்தோம்.

ஒவ்வொருவருக்கும், அவரவருடைய நோக்கங்களும் நினைவுகளும் சொற்களும் செயல்களும் யாவும் ஒற்றுமைப்பட்டு உள்ளடங்கும்படியான தாயெண்ணம் ஒன்று இருக்கும். இந்தத் தாயெண்ணம் வதியுமிடந் தெரியாமலே இருந்துகொண்டு அம்மனிதனுக்கு நேர்கிற எல்லா நிகழ்ச்சிகளையும் இயற்றிவைக்கின்றது. இது வெளிப்படாதவரையிற்றான் ஒருவனுக்கு நேரும் விடயங்கள் ஒற்றுமையற்றுப் பலதிறப்பட்டவைகள் போலத் தோன்றும். இத்தாயெண்ணந்தான் இன்னதென்று நமக்கே தெரியத் தலைப்பட்டவுடன், அதற்கு இனமானவைகளெல்லாம் ஒருங்குடன் திரண்டுவந்து நம்மைச் சூழ்ந்துகொள்வன ஆகும். நமக்கு வரவேண்டியவைகளெல்லாம், நம்முடைய உள்ளத்தினின்று நாம் என்ன கொடியை அடையாளமாக உயர்த்துகின்றோம் என்பதை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருப்பன போலவே தோன்றுகின்றன. ஒருவனது தாயெண்ணம் பொய்யும் வஞ்சனைகளுமே யாயின் பொய்யும் வஞ்சனையுமே அவனைப் புடைசூழ ஓடிவரும். தாயெண்ணமாய்த் தோன்றநின் றுயர்த்திய கொடியோ அன்பும்அருளுமாயின், அன்பும் அருளும் தழைக்கின்ற நிகழ்ச்சிகள் தாமே அவனைத் திரண்டு சேரும்.நம்வயின் நிகழ்கின்ற அனைத்தையும்இந்தவோர்தாயெண்ணத்தைத் தலைவைத்து நோக்குவோமெனின் விதியின் வன்மை எத்தூரம் செல்லவல்லதென்பதைச் சோதித்துஅறிவது ஒருவாறு எளியதாகுமென்ன மதிப்பதற் கிடமுளது.

இன்பத்திற்குரியவைகள் என்பனவும்துன்பத்திற்குரியவைகள் என்பனவும் நமக்குப் புறத்தினின்று வந்தெய்துகின்றனவாயினும், அவ் இன்பமும் துன்பமும் நம்மகத்தே நம்மாலாயே நிகழப்பெறுவன என்பதில் ஏதேனும் ஐயமுண்டோ? இந்த இன்பத்திற்குந் துன்பத்திற்கும் அதிபதியாயிருந்துஅமைத்துவைப்பது அவரவர் விதியே என்பது உலகத்தினில் நடைபெறும் பொதுக் கருத்து. இதுபற்றியே, "வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமின்எனப்போகா" என்னு முதுமொழி வழங்கலாயிற்று. வருவனவும் போவனவும் விதியின் வயம் ஆகலாம். எனினும் ஒன்று உணர்தல் வேண்டும். மனிதர் வருந்தி யழைப்பதும் விரைந்து தூரத்துவது மின்ப துன்பங்களுக்குக் காரணமா யிருக்கின்றவைகளெனக் கருதப்படும் பொருள்கள் நிகழ்ச்சிகள் விடயங்கள் முதலியவைகளையே யல்லாமல் இன்பங்களையும் துன்பங்களையும் அல்ல. இவ்வேற்றுமையை உற்று நோக்கினாலன்றி உணர இயலாது. விடயங்களைத்தான் வாவென்றும் போவென்றும் வேண்டினனாய் நனி நெடுந்தூரம் நினைந்திரங்கி நெஞ்சம் பெரிது புண்ணாகின்றான் மனிதன்.அவை தன் இச்சைப்படி வருவதும் போவதும் நேராமைபற்றிய வருத்தம் ஒன்றே எஞ்சியதாகின்றது. மற்று, விடயத்தொடர்பின்றியேயும் இன்பமுந் துன்பமும் தனக்குரியதாகலாம் என்பதை உணர்வானாயின் விதியின் வலியை அவன்பெரும்பாலும்வென்றழித்தபடியாகும். "என்னுடைய இன்பத்திற்காக இன்னபொருள், இன்னநிலை, இன்னார், இச்செயல், வேண்டும்" என்னக் கூவிக் கூவி உழலாமல், இன்பத்தைமட்டும் வருந்தி யழைத்தக்கால் வேண்டுமளவு இன்பம் வந்தேதீரும் என்பதை மறத்தலாகாது. அல்லது, "இன்னபொருள், இன்னநிலை,இன்னார் இச்செயல் போனால்என்னுடை துன்பமும்போம்" என்ன அவைகளைத் தூரத்தியடிக்கத் துடிக்காமல், துன்பத்தைமட்டுமே போக்குதற்கு முயல்வானாயின் அது போய்த்தான் தீரும். அன்றியும் துன்பப் பொருள்களின் சூழ்ச்சிகளையும், இன்பநிலைக்குரியவைகளாய் மாற்றிக்கொள்வதும்மனிதனது மனத்திற்கு, முயன்றக்கால், இயலாத தொன்றன்று. இவ்வண்ணம், புறத்தினின்று புரிபவைகளுக் காளாகாமல் உள்ளத்தளவே நிற்பதுதான் வித்தகத்தின் செய்தியாம். வருவனவும் போவனவும் விதியின் வயம், மற்று இன்பமுந் துன்பமுமோ வித்தகத்தின் வாய்மை, என்னல் வேண்டும்.

என்றக்கால் என்ன பயன்? இத்தகைய வித்தகந் தான்யாதென்னத் தேர்ந்துகொள்ளல்வேண்டாவோ ஆயினும், பேரறிவு மெய்ஞ்ஞானம் முதலிய பற்பல பொருள்களைத் தாங்கியுள்ள இச்சொல்லையாம் வரையறுத்து இயம்பமுயல்தலாகாது.முயல்வோமெனின் வரம்பின்றிப்பரந்துள்ள அதன்பெருமையைச் சுருக்கிட்டு முடித்ததாகும். வெளிச்சத்தின் தன்மைதான் இன்னதென்று ஆராய விரும்புமொருவன், அருகிலுள்ள விளக்குகளை எல்லாம் அவித்துவிட்டுத் தன் ஆராய்ச்சியை ஆரம்பிப்பானாயின்,புகைகின்ற திரிகள் தாம் அவன்கைகளுக்கு எட்டினவைகளாகும். இலக்கணவரையறை வேண்டுவோர்க்கெல்லாம் விளையும் பயன் இன்னதே. வித்தகம் என்றக்கால் அது யாதென்பதை எத்திறத்தோரும் ஒவ்வோரளவு உணர்வார். அவ்வளவிலேயே நாமதனை ஏற்றுக்கொள்வோம். காதல் அன்பு என்பன போல்பவைகளை என்னென்று வரையறுத்து எவ்வித உருவத்தால் தெரியக்காட்டவல்லவ ராவோம்? காதலைப்போல், அறியப்படாத அதன் ஆழமே வித்தகத்தின் அழகிற்சிறந்த உருவமுமாகும். வித்தகத்திற்கு உருவமென்ப தொன்று வேண்டவும் வேண்டா. தீச்சுடரின் அழகைப்போல்

வித்தகத்தின் அழகும் மாறிமாறித் தோன்றும் பெற்றியதாகும். பீடமிசை நிறுவிய ஒரு பொற்சிலையன்று அது. நாம் விண்ணோக்கி உயர்கின்றபோது நம்மோடு உயர்ந்தும், மண்ணூடு வீழ்கின்றபோது நம்மோடு வீழ்ந்தும், அழுகின்ற நம் கண்ணீரில் தன் கண்ணீரைக் கலந்தும், சிரிக்கின்றபோது நம்மோடு சிரித்தும் இடைவிடாது நம்மைத் தொடர்ந்து வருகின்ற தெய்வமே ஆகும் அது. நம் இளமைதொட்டு இறக்குமளவும் மாறாது ஒருபடித்தாய் இருக்குமொரு வித்தகம் உண்மையாய வித்தகமன்று. வித்தகம் என்ற சொல் விளக்குகின்றபொருள்கள் ஒருவனுக்கு அதிகமாக அதிகமாக, அதன் அழகும் ஆழமும் பெருகுவதாகி அவனது வித்தகமும் வளர்ச்சியடையப் பெறும். இவ்வித்தகவழியில் வைத்து நடக்கின்றவொவ்வொரு அடியும், கடந்து முடியலாகாப் பெருவெளியைப் போதிக்கவே படர்கின்றதென்னலாம்.

---

# ஒத்தெல்லோ

## [Shakespeare's —"Othello"]

அங்கம் 3. களம் 3.

[430-வது பக்கத் தொடர்ச்சி]

டேஸ்டி:—ஆம், விரைவினில் இருக்குமோ அது [1]

ஒத்:—இனியாய், நின்பொருட்டுப் பின்னும் விரைவில் [2].

டேஸ்:—இவ் விரவுப்போசனத்தின்போது இருக்குமா அது?

ஒத்:—இல்லை, இவ்விரவில்லை.

டேஸ்:—எனின், நாளைப் பகற்போசனம்? [3]

ஒத்:—மனையில் நான் போசன மருந்தப்போவதில்லை. கொத்தளத்தில் தலைவர்களைச் சந்திக்கின்றேன் [4].

டேஸ்:—ஏன், அப்படியாயின், நாளை யிரவு; அல்லது செவ்வாய்க்கிழமை காலை; செவ்வாய்க்கிழமை பகலில், அல்லது இரவு; புதன்கிழமைகாலையில்—வேண்டிக் கொள்கின்றேன், காலத்தைக் குறித்துச் சொல்; எனினும், மூன்று நாட்களுக்கு மேற்படவோ வேண்டா அது.[5] எனினும், அவனது அதிக்கிரமம், நம் பொதுஅறிவின்படி—யுத்தமானது மிகச்சிறந்தவர்களினின்றும் உதாரணங்கள் உண்டாக்கவேண்டுமென்று சொல்வார்களென்னு மதுதவிர—தனிமையில் தகையுறற்குரிய ஒரு குற்றங்கூட ஆதலருமை[6]. அவன் எப்பொழுது வரலாம், சொல்லெனக்கு, ஒத்தெல்லோ. நான் மறுத்தோ அல்லது இப்படித் தயங்கித் தயங்கியோ நிற்கும்படி யாது நீ என்னைக் கேட்கக்கூடும் என எனது ஆன்மாவினுள் ஆச்சரியப்படுகின்றேன் [7]. என்ன! மைக்கேல் காஸ்ஸியோ; காதல் பாராட்டு முன்னுடன் வந்தவன் [8]; உன்னைப் பழுதுரைத்து நான் பேசியபோது அத்துணைப் பன்முறை நின் திறத்தினை ஏற்றுக்கொண்டவன்![9] அன்னவனை உட்கொணர இத்துணை நான் செய்யவேண்டியிருப்பதா! இது கேள், அதிகம் நான் செய்தல் கூடும்"[10] —

ஒத்:—வேண்டிக்கொள்கின்றேன், இது போதும்; தனக்கு இட்டமானபோது வரட்டும் அவன். ஒன்றும் உனக்கு மறுக்கமாட்டேன் நான்.

டேஸ்:—ஏன், தயவாகக் கொடுப்பதொன்றும், அன்றே இது. மற்று, உன் கையுறையை அணிந்து கொள்; அல்லது உரந்தரும் உணவினை உட்கொள்; அல்லது, உன்னை வெப்பமாக வைத்துக்கொள், என்று உன்னை நான் வேண்டிக்கொள்வதுபோலும்,

(1) "நல்லவென் அன்பே காஸ்ஸியோவை அழைத்து மீண்டும் அவன் உத்தியோகத்தை அவனுக்குக் கொடு" என்று மன்றாடிய டெஸ்டிமோனாவிற்கு, ஒத்தெல்லோ, "இப்பொழுதில்லை, மற்றொரு சமயம்" என்று பதிற் சொல்ல, அவள் காஸ்ஸியோவிற்கு வாக்களித்தவண்ணம் தன் வேண்டுகோளை மேன்மேலும் வற்புறுத்துவாளாகி, "இப்பொழுது அல்லாவிட்டாலும் சீக்கிரத்திலேனும் அது செய்வாயோ" என்று கேட்கின்றாள்.

(2) கொஞ்சிக் குலாவிக்குலாவிக் கேட்கின்ற டெஸ்டிமோனாவின்பால் காதல்சுரந்த கருத்தினனாகி, இது கூறுகின்றான். "இனியவென் டெஸ்டிமோனா, நானே அவனை விரைவில் அழைத்துக்கொள்ள இருக்கின்றேன். மற்று, நீ அவன்பொருட்டுப் பரிந்துபேசுவதுபற்றி, உன்னுடைய உவகைக்காக அவனைப் பின்னும்விரைவில் அழைத்துக்கொள்வேன் காண்" என மென்மொழி கூறுகின்றான்.

(3) பகற்போசனத்தின்போது இருக்குமா-என முடித்துக்கொள்க.

(4) நாளைப் பகல் நான் கொத்தளங்களுக்குச் சென்று அங்குப் படைத்தலைவர்களைச் சந்தித்துப் பேசவேண்டியவனாயிருக்கின்றபடியால், நாளைப் பகற்போசனம் வீட்டிற் கொள்வதற்கில்லை - என்பது பொருள்.

(5) 'சீக்கிரத்தில், விரைவில் அழைக்துக் கொள்கின்றேன்' என்று நீ கூறுவதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்; எப்பொழுதுதான் அவனை அழைத்துக்கொள்வாய் என்று ஒரு வேளை குறிப்பிட்டுச்சொல்; அது மூன்று நாட்களுக்கு மேற்படலாகாது - என்று டெஸ்டிமோனா நெருக்குகின்றாள்.

(6) பார்க்குமிடத்து, காஸ்ஸியோ குற்ற மொன்றும் பெரிது செய்தவனுமல்லனே; மற்று, அவனை அழைத்துக் கொள்ள இத்துணைத் தயங்குவானேன்-என்பது கருத்து. அவனது அதிக்கிரமம், நம் பொது அறிவின்படி, தனிமையில் தகையுறற்குரிய ஒருகுற்றங்கூட ஆதல் அருமை - என இவ்வாக்கியம் இயையும். தனியே யழைத்து, 'நீயேன் இப்படிச்செய்தாய்' என்று கேட்கவேண்டியவொரு குற்றங்கூட அல்லவே காஸ்ஸியோ செய்தது; அதற்கா இத்தனைப் பெரிய தண்டனை விதிப்பது - என்பது பொருள். ஷேக்ஸ்பியர் காலத்தில், குடிவெறி கொள்வது பெருங் குற்றமாகக் கடியப்பெற்றதில்லை.

யுத்தமானது......தவிர, என்பது இடைப்பிறவரல். யுத்த காலத்தில் ஒழுக்கங் கெடாமலிருக்கவேண்டியது மிகவும் அவசியமாகையால், மற்றவர்கள் கண்டு அஞ்சியிருக்கும்படி, பெரிய பதவியிலிருப்பவனையும் சிறிய குற்றத்திற்காக அதிகம் தண்டித்து உதாரணமாக்க வேண்டுமென்று கருதுவதற்கு இணங்கினால் இணங்கலாமே யொழிய, வேறு பொதுவாக, காஸ்ஸியோ செய்ததற்கும் அவன் அடைந்த தண்டனைக்கும் பொருத்தமே இல்லை-என்பது பொருள்.

அல்லது, உனக்கே யொரு சிறப்பான நன்மையைச் செய்துகொள்ளும்படி மன்றாடுவதுபோலும் ஆகுமாம் இது [11]. மற்று, நின் காதலையே நீண்டுதற்கு யான் குறித்த வொரு வேண்டுகோள் உடையவளாகுங்கால் அது, பாரமும் கஷ்டமும் நிறைந்து அளிப்பதற்கு அஞ்சவேண்டியதாகி இருக்கும் [12].

ஒத்:—உனக்குநான் ஒன்றும் மறுக்கமாட்டேன். இதன் மேல், உன்னை வேண்டிக் கொள்கின்றேன், என்னைச் சிறிது தனியே விடுவதனை எனக்கு அருள்வாய் [13].

டேஸ்:—உன்னை மறுப்பனோ நான்? இல்லை. என் தலைவ, விடைகொள்கின்றேன்.

ஒத்:—எனது டெஸ்டிமோனா, விடை யுனக்கு; நின்பால் நேராக வருவேன் நான்.

டேஸ்:—எமிலியா, வா—உன் மனோபாவம் கற்பிக்கின்றபடி இரு; நீ யாவதாயிருப்பினும் நான் கீழ்ப்படிகின்றேன் [14].

[எமிலியாவுடன்
போகின்றாள்]

ஒத்:—சீர்மிகு பேதாய்! பாழ்படு நரகமே என தான்மாவைப் பற்றிக்கொள்ளட்டும், நின்னையோ யான் காதலிக்கின்றேன்! மற்று, நின்னை யான் காதலிக்காக்காலையில் பிரளயமே மீண்டும் வந்துற்றது [15].

இயா:—என் பெருந்தகைப் பிரபுவே— [16].

ஒத்:—என்ன சொல்கின்றாய் நீ, இயாகோ?

இயா:—மைக்கேல் காஸ்ஸியோ, நீ என் பெருமாட்டியைக் காதல் பாராட்டிய காலத்தில், அந்தவுன் காதலைப்பற்றி அறிவானோ? [17].

ஒத்:—அறிவான், முதலிலிருந்து கடைசிவரையில்; ஏன் கேட்கின்றாய் நீ?

இயா:—என் மனதின் திருப்திக்காகத் தான்; மேலொன்றுந் தீதில்லை.

ஒத்:—நின் மனத்தினதற்காக ஏன், இயாகோ? [18]

இயா:—அவளை அவன் அறிந்திருந்தானென்று நான் எண்ணவில்லை.

ஒத்:—ஆகா; பன்முறை எமக்கிடையே சென்றுளன். [19]

இயா:—உண்மையாகவா?

ஒத்:—உண்மையாகவா! ஆம், உண்மையாகவே: அதனில் நீ ஏதேனும் காண்கின்றாயோ? யோக்கியமானவன் அல்லனோ அவன்?

இயா:—யோக்கியமானவனா, என் பிரபுவே?

ஒத்:—யோக்கியமானவனா! ஆம், யோக்கியமானவனா?

இயா:—என் பிரபுவே, எனக்குத் தெரிந்தவரையில்.

ஒத்:—நீ என்ன நினைக்கின்றாய்?

இயா:—நினைக்கின்றேனா, என் பிரபுவே?

ஒத்:—நினைக்கின்றேனா, என் பிரபுவே! அடதெய்வமே, காட்ட வொண்ணாக் கொடுமைவாய்ந்த உற்பாதம் எதுவோ தன் மனதில் இருந்ததென்ன என்னையே எதிரொலி செய்கின்றானே [20]. ஏதோ குறிப்புடையை நீ, காஸ்ஸியோ என் மனைவியை விட்டுச்

(7) உன்னிடம் நானிவ்வளவு மன்றாடவேண்டியிருக்கின்றது. நீ யென்னை ஒன்று கேட்டு அதனை மறுக்கவோ அல்லது கொடுக்க மனமில்லாமல் தயங்கவோ கூடியது யாதேனும் இருக்கக்கூடுமென்று ஆன்மசாக்ஷியாக நான் எண்ணவில்லை—என்பது பொருள்.

(8) காதல்காட்ட என்னிடம் நீ வந்தபோதெல்லாம் உன்னுடன் வந்த அவ்வளவு அந்தரங்க நண்பன்—என்பது பொருள்.

(9) நீ உடன் இல்லாத வேளையில் உன்னை நான் பழித்துரைத்தபோதெல்லாம் உன் சார்பாகப் பரிந்து பேசிய அத்துணை உண்மை நட்புடையவன்—என்பது பொருள்,

(10) அவனை நீ ஏற்றுக்கொள்வதற்கா நான் இத்தனை பாடுபடவேண்டியிருக்கின்றது, இது என்ன விபரீதம்—என்பது பொருள்.

வாக்கியம் முடியவில்லையாகையால், டெஸ்டிமோனா என்ன சொல்லவருகின்றாள் என்பது தெரியவில்லை. அதற்குள் ஒத்தெல்லோ இடைதடுத்துப் பதிற்சொல்லி விடுகின்றான்.

(11) என் பொருட்டுத் தயவாக எதையும் கொடுத்துவிட்டதாக எண்ணாதே. உனக்கே நன்மையான தொன்றைச் செய்துகொள்ளும்படி வேண்டுவது போன்றே, உனது உண்மை நண்பனை மீண்டும் அழைத்துக்கொள் என இப்பொழுது வேண்டுகின்றேன் என்பதை எண்ணிக்கொள்—என்பது பொருள்.

(12) என்மீது உனக்குள்ள காதலுக்கொரு சோதனையாக ஒன்று செய்யும்படி உன்னை நான் வேண்டநேருவேனாயின் அது கொடுப்பதற்கு மிகவும் கடினமானதாக இருக்கும். 'இதனை நான் இவளுக்கு எங்ஙனம் கொடுப்பேன்' என்று நீ அஞ்சவேண்டியவனாவாய்—என்பது பொருள்.

(13) உருப்பெறாச் சங்கையொன்று ஒத்தெல்லோவின் உள்ளத்தை உறுத்துகின்றது. அவள் இப்பொழுதுதன்னை விட்டுப் போனாற்போதும் என்னும் எண்ணமுடையவனாயவள் வேண்டுகோளிற் கிணங்கினான்போலப் பாவித்து அவளை இங்ஙனம் அகற்றுகின்றான்.

(14) உன் மனோபாவம் கற்பிக்கின்றபடி இரு - என்றது ஒத்தெல்லோவைப் பார்த்துச் சொன்னது. தன்னிடத்தில் ஓரளவு சலிப்புக் கொண்டிருக்கின்றான் என்பதை அறிகின்றாள் டெஸ்டிமோனா, என்னை நீ உவந்தாலும் வெறுத்தாலும், உன் மனத்தின்படி நீ என்னிடம் நடந்துகொள். நானோ எப்பொழுதும் உனக்கு அடங்கினவளாகவே இருப்பேன்" - என்பது பொருள்.

(15) செல்லலுற்ற டெஸ்டிமோனாவைச் சிந்தித்தவண்ணமாய் ஒத்தெல்லோ தனக்குள் சொல்லிக்கொண்டது இது. 'பேதையே' என்று அவளை அழைப்பது இரக்கத்துடன் கூடிய அருமையைக் காட்டுகின்றது. பாழ்படு நரகமே நான் புகும்படி நேர்ந்தாலும் உன்னைக் காதலிப்பது ஒழியேன்; ஒழிவேனாயின் என்வரையில் யுகப்பிரளயம் வந்துவிட்டதற்கே ஒப்பாகும் - என்பது பொருள்.

(16) சிந்தனையில் ஆழ்ந்திருந்த ஒத்தெல்லோவை இயாகோ அழைக்கின்றான்.

(17) காஸ்ஸியோ...அறிவானோ, என்று முடித்துக்கொள்க. காதல்பாராட்டிய காலம், என்பது, அவளுடைய காதலைப் பெறுவதற்காக ஒத்தெல்லோ அவள் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த காலம்.

(18) உன் மனத்தின் திருப்திக்காக இதனைக் கேட்பானேன் - என்பது பொருள்.

(19) எங்களுக்கிடையே அந்தரங்கத் தூது சென்றுளன் - என்பது பொருள்.

(20) ஒத்தெல்லோவின் எதிரொலி போன்று, அவன் கேட்பதையே எதிரெதிர் இயாகோவுங் கேட்பதுபற்றிக்

சென்றவுடன், அதனை நீ விரும்பவில்லையென்று நீ இப்பொழுது சொல்லக் கேட்டேன். எதனை விரும்பவில்லை? நான் காதல் பாராட்டிய நெறிமுழுவதிலும் அவன் என் அந்தரங்கத்திலிருந்தான் என்று நான் சொல்லிய அளவில், "உண்மையாகவா" என்று நீ கூவினாய். கூவி ஏதோவொரு கொடிய கருத்தை உன் மூளையில் அடைத்துவைப்பவன்போல் நின் புருவங்களைக் குறுக்கிச் சுருக்கினாய். என்னை நீ நேசிக்கின்றாயாயின் உன் எண்ணத்தை எனக்குக் காட்டு[21].

இயா:—என் பிரபுவே, நானுன்னை நேசிக்கின்றேனென்பதை நீ அறிவாய்.

ஒத்:—நீயது செய்கின்றாயென்றே எண்ணுகின்றேன்[22]; மேலும்— நேயமும் நீதியும் நிறைந்தவன் நீ என்பது எனக்குத் தெரியும்[23]. மேலும், உயிர்ப்பினை அளிக்குமுன் நின் உரைகளை நிறுக்கின்றாய்[24]. ஆதலின், நின் நிறுத்தல்கள் எனக்குப் பின்னும் அதிகம் அச்சத்தைச் செய்கின்றன[25]. மற்று, அத்தகையவை, பொய்யும் துரோகமும் உடைய துஷ்டனிடத்தில் பழக்கத்தின் சூழ்ச்சியே யாகும்[26]. நியாயம் உடைய ஒருவனிலோ உணர்வினால் ஆளமாட்டாத இதயத்தினின்றெழுகின்ற இரகசிய குறிப்புக்களாகியிருக்கின்றன[27].

இயா:-மைக்கேல் காஸ்ஸியோவைப்பற்றி, அவன் யோக்கியனென்று நான் நினைக்கின்றேன் என்று ஆணையிடத் துணிவேன்[28].

ஒத்:—நானும் அப்படித்தான் நினைக்கின்றேன்.

இயா:—மனிதர் எப்படித் தோன்றுகின்றார்களோ அப்படியே யிருக்கவேண்டும்: அல்லது, அப்படி இல்லாதவர்கள், ஒன்றுமே தோன்றாதவர்களா யில்லாமலிருத்தல் நலம்.[29]

ஒத்:—நிச்சயம், மனிதர் தாம் யாவதாகத் தோன்றுகின்றார்களோ அதுவேயா யிருத்தல்வேண்டும்.

இயா:— பின்னே யென்ன; காஸ்ஸியோ யோக்கியனான ஒருவனென்று எண்ணுகின்றேன்.

ஒத்:—இல்லையில்லை, இதனினும் அதிகம் இதனிலிருக்கின்றது[30]. நீ சிந்தனை யிடுகின்றவாறே உன்னுடைய எண்ணங்களை எனக்கு எடுத்துச் சொல்லும்படி வேண்டிக்கொள்கின்றேன்; உன் எண்ணங்களின் மிகக் கெட்டவைகளுக்கு வார்த்தைகளின் மிகக் கெட்டவைகளைக் கொடு.[31]

இயா:—நல்லவென் தலைவ, என்னை மன்னிப்பாய்: என் கடமையான காரியம் ஒவ்வொன்றிற்கும் நான் கடமைப்பட்டிருக்கின்றேனாலும், அடிமைகளுக்கும் உரிமையுடைய வொன்றிற்கு நான் கட்டுப்பட்டிருக்கவில்லை.[32] என் எண்ணங்களைப் பகர்ந்துவிடவா! ஏன்: இழிவும் பொய்யுமுடையவை அவையென்று நினைத்துக்கொள்வோம். அருவருப்புடையவைகள் சிற்சிலபோது முட்டி முட்டி நுழையாத அரண்மனை யொன்று எங்குளது? அசுத்தமான கருத்துக்கள் தருமமுடைய சிந்தனைகளோடு சேர்ந்து அதிகாரம் செலுத்துதற் கமராத தூய்மை வாய்ந்தமார்பினை உடையவன் எவனுளன்? [33]

கலக்கமுற்ற ஒத்தெல்லோ இது கூறுகின்றான். 'நினைக்கின்றேனா, என்பிரபுவே" என்று இயாகோ கேட்பதைத் தானும் கேட்டுத் தன் வெறுப்பைக் காட்டுகின்றான்.

(21) ஒத்தெல்லோவின் மனதில் சந்தேகத்தைக் கிளப்பிக் கலக்கத்தை உண்டாக்கவேண்டும் என்று இயாகோ எண்ணிச் செய்த சூழ்ச்சி கைகூடிவருகின்றது. உளைந்த மனமுடைய ஒத்தெல்லோ, "உன் எண்ணத்தை வெளிப்படையாகச் சொல்" என்று மன்றாடுகின்றான்.

(22) அது செய்கின்றாய் - நேசிக்கின்றாய்.

(23) நேயமும் நீதியும் நிறைந்தவன் நீ என்பது எனக்குத் தெரியும் - என்பது இடைப்பிறவரல், ஆகையால் மேலும் மேலும் என ஈரிடத்தும் தொடர்கின்றது.

(24) உச்சரிப்பதற்குமுன் நீ நன்கு யோசித்து உன் வார்த்தைகளை நிறுத்துப் பேசுகின்றாய்.

(25) கூசிக்கூசி நீ உன்பேச்சை நிறுத்தி விடுவதால், என்ன கெட்டசெய்தியை எனக்குச் சொல்லத் தயங்குகின்றாயோ என்னும் அச்சம் எனக்குப் பின்னும் அதிகமாகின்றது - என்பதுபொருள்.

(26) அத்தகையவை - இப்படி, பேசவருவதை இடையிடையே நிறுத்திவிடுதல். துஷ்டர்கள் இதனை ஒரு சூழ்ச்சியாகப் பழக்கம் செய்துவைத்துக்கொண்டிருப்பார்கள் - என்பது பொருள்.

(27) இதன் பொருள் தெளிவுறத் தெரியவில்லை. ஆகையால், பாடபேதங்கள் பல. நல்லுணர்வானது, ஒருவர் மீதும் பொல்லாங்கு சொல்லவேண்டா, என்று தடுக்கின்றது. நட்பிற்கு இடமாகிய இதயமோ உன் நண்பனிடத்திலிருந்து ஒன்றையும் மறைக்கலாகாது, என்று தூண்டுகின்றது. உணர்வானது இதயத்தை முற்றிலும் அடக்கி ஆண்டுவிடுமானால், ஒன்றுமேசொல்லாமல்நின்றுவிடுவான் அவ்வாறின்றி உணர்வுதடுத்தும்இதயம்கேளாமல்உழைக்கின்றபோது, தான் தடைபடுகின்ற செய்தியை இரகசியமாய்த் தெரிவிப்பதுபோல் இடையிடையே, பேசவரும் சொற்கள் நின்றுவிடுகின்றன - என்பது இதன் பொருள் போலும்.

(28) ஆணையிடத் துணிவேன் என்று சொல்லுகின்றானாலும், இவ்வாக்கியத்தின் அமைப்பு அவனுடைய சந்தேகத்தைத் தெரிவிக்கின்றது.

(29) பொருள்பொதிந்த வாசகம்போல் தோன்றும்படி இயாகோ சொற்களை நடத்திக் குழப்புகின்றான். இது இவனுடைய சூழ்ச்சிவகைகளுள் ஒன்று. யோக்கியர்களாகத் தோன்றுகின்றவர்கள் யோக்கியர்களாகவே இருக்கவேண்டும், அப்படி யில்லாமற்போனால், அவர் மனிதர் போல் கூடத் தோன்றலாகாது - என்ன இது ஒருவாறுபொருள் படும்.

(30) நீ சொல்வதைக்காட்டிலும் உன்மனதில் அதிகம் இருக்கின்றது - என்பது பொருள்.

(31) மிக்க கெட்ட தொன்றை நீ எண்ணலாம்; ஆயின், அதனை மறைக்காமல் அதற்குரிய கெட்ட சொற்களையே கொண்டு எனக்குத் தெரிவித்துவிடு-என்பது பொருள்.

(32) தன் எண்ணத்தைத் தனக்குள்ளே வைத்துக் கொள்ளும் உரிமை அடிமைகளுக்கும் இருக்கின்றது: ஆகையால் நானிதனை உனக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கவில்லை - என்பதுபொருள்.

(33) அரண்மனைக்குள்ளும் அருவருப்புடையவை சேரலாம். அதுபோல, தூய இதயத்திலும் சிலபோது அசுத்தமான கருத்துக்கள் அடையலாம். இவ்வியற்கையின்படி, என் மனத்திலும், கெட்ட எண்ணங்கள் இப்பொழுது சேர்ந்திருக்கின்றன என்றே வைத்துக்கொள்வோம். ஆயினும் நான் அவைகளை உனக்குச் சொல்லித்தான் தீரவேண்டுமென்று கடமைப்பட்டிருக்க வில்லையே - என்பது பொருள். கெட்ட எண்ணம் என்பது, பிறரைப்பற்றிக் கெடுதியாக நினைக்கின்ற எண்ணத்தைக் குறிக்கும்.

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—12. நாடவிட்ட படலம்

[421-வது பக்கத் தொடர்ச்சி]

### சொல்லில்லா திருக்கும் பொருள்

சுக்கிரீவன் நெடு நெறியெல்லாம் குறித்து உரைத்த பின், புறப்படநின்ற வானரத் தலைவர்களுள் அனுமனை இராமன் தன்வயின் அழைத்துச் சீதாபிராட்டியின் அடையாளத்தைப் பகர்வானாகி அவளது அவயவங்களினழகைத் தனித்தனி பலபட வருணிப்பானாயினன்:—

பாற்கடல் பிறந்த செய்ய பவளத்தைப் பஞ்சி யூட்டி
மேற்பட மதியஞ் சூட்டி விளங்குற நிரைத்த மெய்ய
காற்றகை விரல்க ளோய கமலமும் பிறவுங் கண்ட
வேற்பில வென்பதன்றி யிணையடிக் குவமை யென்னே

[அனுமனே, சீதையின் அழகிய கால் விரல்கள், பால் கடலில் உண்டான சிவந்த பவழத்தை, செம்பஞ்சுக் குழம்பு ஊட்டி, மேலே சந்திரனைச் சூட்டி, விளங்கும்படி ஒழுங்காக அமைத்த தோற்றத்தை யுடையவை. இத்தகைய விரல்களோடு கூடியிருப்பதால், உலகத்தில் உவமையாகக் கூறப்படும் தாமரையும் மற்றைய பொருள்களும் அவள் பாதங்களுக்கு உவமையாக மாட்டா என்று சொல்லலாமே யல்லாமல், அவளது இரண்டு பாதங்களுக்கும் பொருத்தமான உவமை யாதோ?]

எனச் சீதையின் பாதங்களைப்பற்றி இராமன் தன் வருணனையைத் துவக்குகின்றான். தனிச்சிறப்பு இதனில் ஒன்றுமில்லை என்பது உண்மையே. எனினும், எல்லோரையும் போல்பவனுமாய் அல்லனுமா யமைவதிற்றான் சீதாபிராட்டியின் சிறப்பினை நாம் காணல் வேண்டும் போலும்.

நீமெயா யுணர்தி யைய நிரைவளை மகளிர்க் கெல்லாம்
வாய்மையா லுவமை யாக மதியறி புலவர் வைத்த
தாமையா மென்ற போது மல்லன சொல்லி னானும்
யாமயாழ் மழலை யாடன் புறவடிக் கிழுக்க மன்னே

[அனுமனே, வரிசையாக வளையல் அணிந்த மாதர்களின் புற அடிகளுக்கெல்லாம் உவமையாகும்படி புத்தி நுட்பமுடைய புலவர்கள் ஏற்படுத்திய ஆமையானது, இரவில் இசைக்கின்ற யாழைப் போன்ற மழலைச் சொற்களைப் பேசுகின்ற சீதையின் புறவடிக்கு உவமை ஆகும் என்றாலும், வேறு சொன்னாலும் அப் புறவடிகளுக்குக் குறைவேயாம். இதனை நீ மெய்யாக உணர்ந்துகொள்]

வினைவரா லரிய கோதை
பேதை மென்கணைக் கான்மெய்ய
நினைவ ராலரிய வின்ன
நேர்படப் புலவர் போற்றுஞ்
சினைவரால் பகழி யாவ
நெற்சினை யென்னுஞ் செப்ப
மெனைவராற் பகரு மீட்டி
யானுரைத் தின்ப மென்னே

[மெய்யுடைய அனுமனே, சித்திரகாரர்களாலும் எழுதுவதற்கரிய கூந்தலையுடைய பேதையாகிய சீதையின் மெல்லிய கணைக்கால்கள், நினைத்துப் பார்ப்பவர்க்கும் எட்டாத தன்மை யுடையவை. ஆகையால், புலவர்கள் பொருந்தும்படி சிறப்பித்துக் கூறுகின்ற, கருக்கொண்ட வரால் மீனும், அம்பறாத் தூணியும், சூல் கொண்ட நெற் பயிரும் என்னும் வார்த்தை எல்லாராலும் சொல்லப்படுந் தன்மையது. ஆதலின் யானும் அதனையே எடுத்துச் சொல்வதில் என்ன இன்பம் இருக்கின்றது]

அரம்பையென் றளக மாதர்
குறங்கினுக் கமைந்த வொப்பின்
வரம்பையுங் கடந்த போது
மற்றுரை வகுக்க லாமோ
நரம்பையு மமிழ்த நாறு
நறவையு நன்னீர்ப் பண்ணைக்
கரும்பையுங் கடந்த சொல்லாள்
கவாற்கிது கருது கண்டாய்

[கூந்தலையுடைய மாதர்தம் தொடைகளுக்கு, வாழை யென்று சொல்லியுள்ள உவமையின் எல்லையையுங் கடந்த போது, வேறு உவமை எடுத்துச்சொல்லவும் முடியுமோ? வீணை நரம்பின் நாதத்தையும் அமிர்தம் போல் மணக்கின்ற தேனையும், நல்ல நீர்நிறைந்த கழனியில் வளர்ந்த கரும்பையுங் கடந்த இனிமை மிக்க சொற்களைப் பேசும் சீதையின் தொடைகளின் திறத்தில் இதனை ஆலோசித்துப் பார்]

வாராழிக் கலசக் கொங்கை
வஞ்சிபோன் மருங்கு லாடன்
தாராழிக் கலைசா ரல்கு
றடங்கடற் குவமை தக்கோய்
பாராழி பிடரிற் றாங்கும்
பாந்தளும் பனிவென் றேங்கும்
மோராழித் தேருங் கண்ட
வுனக்குநா னுரைப்ப தென்னே.

[சிறந்தவனான அனுமனே, கச்சணிந்த சக்ரவாகப் பறவையையுங் கலசத்தையும் போன்ற முலைகளையும் வஞ்சிக்கொடி போன்ற இடையையும் உடைய சீதையின், கிண்கிணி மாலையணிந்த வட்டமான ஆடையைச் சார்ந்துள்ள அல்குலாகிய பெரிய கடலுக்கு உவமையாகிய பொருளை, சமுத்திரஞ் சூழ்ந்த பூமியைத்தாங்கும் ஆதிசேஷனையும், பனியை ஒட்டிமேல் எழும்ஒற்றைச் சக்கரமுடைய சூரியனதுதேரையும் பார்த்திருக்கின்றஉனக்கு நான் என்ன சொல்ல இருக்கின்றது]

இதுகாறும் இராமன், சீதையின் திறத்தில் உவமை யொன்றும் உபயோகமாட்டாத் தன்மையைச் செப்பிவந்தான். அல்குலைத் தாண்டி, சீதையின் இடையின்பால் இவன் சிந்தனை சென்ற வளவில், உவமை கிடக்க, உரையே உபயோகமின்றிக் கழிகின்றது.

சட்டகந் தன்னை நோக்கி
யாரையுஞ் சமைக்கத் தக்காள்
இட்டிடை யிருக்குந் தன்மை
யியம்பக்கேட் டுணர்தி யென்னிற்
கட்டுரைத் துவமை காட்டக்
கட்பொறி கதவா கையிற்
றெட்டவெற் குணர லாமற்
றுண்டெனுஞ் சொல்லு மில்லை.

[இவளையே மேல்வரிச் சட்டமாக வைத்து மற்றுள மாதரை யெல்லாம் பிரம்மதேவன் படைக்கத் தகுந்த

சீதையின் சிறிய இடை இருக்கும் வகையை நான் சொல்லக்கேட்டு நீ அறிவாயென்றால் அது இயலாது. ஏனெனில் உறுதியாகக் கூறி உவமைகாட்ட அந்த இடையை நம் கண்களாகிய இந்திரியம் காணமாட்டாது. கையினால் தொட்டுப் பார்த்திருக்கின்ற என்றால் மாத்திரம் அது உண்டு என்று அறியக்கூடும். வேறு, உண்டு என்ற சொல்லைச் சொல்வதற்கு வழியில்லை.]

இடையின் சிறுமை மாதரார்க் கழகாகுமென்று வடிவுநூல் வல்லவர் வழிவழி யுரைத்துவருவார். நுண்ணிய இவ்விடையைத் தழுவிக் கவிஞர் செய்கின்ற சாகசங்கள் பலப்பல. சிற்றிடை நுண்ணிடை பிடியிடை துடியிடை நூலிடை மின்னிடை, என்ன மங்கைமார் நுசுப்புக் கவிவரர் நாவில் மெல்ல மெல்லத் தேய்ந்து மெலியலாயிற்று. சந்தனமென் குறடு தேய்ந்த காலத்தும் தன் கந்தம் குறைபடாது; இடை தேயத்தேய அதனைப்பற்றிய வருணனை மணம் இலக்கிய நந்தனவனங்களில் அதிகமே கமழ்ந்தது. பொய்யொன்று, அது புலமைப் பொய்யேயாயினும், புறப்பட்டுவிட்டால் பிறகு அதனை அடக்குதலரிது. ஆயினும் என்! இப்பிரபஞ்சத்தின்கண் புறப்பட்ட நெறியெல்லாம் இறுதியிற்போ யொடுங்குவது அப்பரம்பொருளிற்றானே. மெய்யேபோல் பொய்க்கும் பொருளாயிருப்பவன் காண் அப்பரமன் என்று காட்ட விழைந்தனர்போல் கம்பர்பெருமான் மிகமிக நுண்ணியவோர் சூத்திரத்தால் பாவையின் இடையைப் பரம்பொருள் நிலையினோடு இணைத்துவிட்டார். ஐயாயிரம் செய்யுள்களுக்கு முன், இந்நங்கைக்கு மணக்கோலம் அணிந்த தாதிமார் அவள் திருமார்பில் தொய்யில்தீட்டிக் கோலஞ்செய்த காலத்தில்,

சில்லிய லோதிக் கொங்கைத்
திரண்மணிக் கனகச் செப்பில்
வல்லியு மனங்கன் வில்லும்
மான்மதச் சாந்திற் றீட்டிப்
பல்லிய னெறியிற் பார்க்கும்
பரம்பொரு ளென்ன யார்க்கும்
இல்லையுண் டென்ன நின்ற
இடையினுக் கிடுக்கண் செய்தார்

[மெல்லிய தன்மை வாய்ந்த கூந்தலையுடைய சீதையின் திரண்ட இரத்தினங்க ளிழைத்த தங்கச்செப்பைப் போன்ற கொங்கைளின்மீது, காமவல்லி கரும்புவில் முதலிய சித்திரங்களை கஸ்தூரிச் சாந்தினால் தீட்டி, பலவேறு வழிகளால் தேடிப் பார்க்கும் பரம்பொருளைப்போல் யாவருக்கும் இல்லையென்றும் உண்டென்றும் நின்ற இடை, இந்தத் தொய்யிலின் பாரத்தினால் மேன்மேல் வருந்தும்படி செய்தார்.]

என்ற பரிவினுள் சீதாபிராட்டியின் இடையும் பரம்பொருள் நிலையும் ஒன்றாய்க் கலந்துவிட்டன. அவ்விரண்டும் இருக்கவேண்டுமென்பது நிச்சயம்; மற்று, காட்சிப் பிரமாணமே கதியென்றிருப்போர் இல்லையென்பார். அநுமானப் பிரமாணங்களை ஆதரிப்பவர் உண்டென் றுரையாமற் றீரார். தத்தம் ஆன்மாவின் அனுபவமே சான்றாகக் கடவுளினுணர்வைக் கைக்கொண்டவர் தவிர ஏனையோர், நாத்திகரேனும் ஆத்திகரேனும், உண்டு என்றேனும் இல்லை என்றேனும் விளம்பும் வேளைகளில், உண்டு என்பவர்க்கு 'இல்லையோ' என்னும் ஐயமும், இல்லை என்பவர்க்கு உண்டோ என்னும் அச்சமும் உடனுக்குடனே தோன்றிக் கொள்வது இயற்கை. உண்டு என்னும் ஐயத்தைக் காட்டிலும் இல்லையென்னும் எண்ணம் ஒருவனுக்கு அதிகமாயின் அவனை நாத்திகன் என்றும், இல்லையென்னும் ஐயத்தைக்காட்டிலும் உண்டு என்னும் நினைவு அதிகமாயின் அவனை ஆத்திகனென்றும் ஐயத்தின் மிகுதி குறைவுகளைக் கொண்டு வழங்கினால் வழங்கலாமே யல்லாமல், எள்ளளவும் ஐயமின்றிக் கடவுளை ஏற்பாரேனும் மறுப்பாரேனும் எங்கும் இலர். இன்னபடி பல்லியல் நெறியிற் பார்ப்போர்தம் ஐயமும் துணிவும் எதுவாயினும் சீதையின் இடையைப்போல் பரம்பொருளும் இருப்பது உறுதியே. இங்கிலையிலுள்ள ஆத்திகன் ஒருவன் தன்னைத்தானே கேட்டுக்கொள்கின்ற குரலை அயோத்தியா காண்டத்தில் கங்கைப்படல முதற்செய்யுளில் சீதையைப் 'பொய்யோ எனும் இடையாள்'' என்று வருணிப்பதில் மீண்டுங் கேட்கின்றோம். எனினும் சீதைக்கு இடுப்பு இல்லை என்பது சூர்ப்பனகைக்கு மாத்திரம் நிச்சயம். மூக்கு அற்றதேனும் அறாத பெருகும் மோகமுடையவளாய அவ்வரக்கி, "உனக்குத்தான் சீதை அயலில் இருக்கின்றாள் என்னுங் காரணத்தால் என்னை ஏற்காயாயின் நின்னிளையோன் இவ்விலக்குவனோடேனும் என்னை வாழ வைத்திடு'' என்று இராமனை வேண்டி,

இளையவன்தா னரிந்த நாசி ஒருங்கிலா விவளோடு
முறைவேனோ வென்பானேல்
இறைவ வொன்றும் மருங்கிலா தவளோடு
மன்றேநீ நெடுங்காலம் வாழ்ந்ததென்பாய்

["உன் தம்பியோ தான் துணித்த மூக்குச் சிறிதும்இல்லாத என்னோடு சேர்ந்து வாழ எவ்வாறு சம்மதிப்பேன் என்று பிணங்குவானாயின்; தலைவ, இடையென்பதே இல்லாதவளோடு நீ நெடுங்காலம் கூடி வாழ்வதை அவனுக்கு எடுத்துச் சொல்லிச் சமாதானஞ் செய்வாய்]

என்று இதற்கெதிருரை யரிதெனும்படி இயம்பிவிட்டாள்.

பொன்னின் பாவையன்ன சீதையின் மெல்லிடையினின்று ஓர் புலவர் ஓதிய இப்பாடம் நனிமிக உயர்ந்ததாம். சூர்ப்பணகை யனைய சிலர் சீதைக்குஇடையொன்று இல்லையே என்ன விவகரிப்பாராயினும், மற்று அது உண்டு என்னவும் உரைக்கவல்ல ஊக்கத்தைக் கம்பர் தம் பொறுப்பில் பேசவரும்போது தளர்தர விட்டுச்செல்லத் தரிக்கிலராகி, 'இல்லையுண்டு என்ன நின்ற இடை'' என்னவே அதனைக் குறிப்பவராயினார். இவ்வகையில் அது "பல்லியல் நெறியிற் பார்க்கும் பரம்பொருள்''போலுந் தன்மையைப் புந்தியுள் கொள்வதும் அருமையன்று; மற்று உண்டெனின், அது எவ்வகைத்து என்பதை உணர்வதே அருமையாம். ஏனெனில், சீதையின் இடையேபோல் பரம்பொருளும், "கட்டுரைத்து உவமை காட்டக் கட்புலன் கதுவா''. மற்று, விள்ளத்தான் இயலாதெனின் அக்கடவுள் கொள்ளத்தானும் இயலாதென்ன எண்ணிவிடவேண்டா. உணர்வினிற்கெட்டுமாம் அந்

தப் பொருள். உணர்விளுல் உயர்ந்த பெரியோர் ‘தொட்டவெற்குஉணாலாம்’என்றுஇங்குஇச்சீதையிடையின் உண்மைக்குக் கரிகூறும் இராமனேபோல் எக்காலத்திலும் நல்லுறுதிகூறிப் பறைசாற்றுகின்றனர். இன்னவாறு உணர்வதால் கடவுளின் உண்மை உறுதியாவதன்றி, வேறு ‘உண்டு’ என்னும் சொல்லோ எவ்வகையிலும் ஒவ்வுவதென்பது இல்லை. இவ்வரிய இரகசியத்தையே சீதையின் நுசுப்பொடு சார்த்தி “உண்டெனும் சொல்லுமில்லை” என்ற சிறு வாசகத்தால் இராமன் சாதித்துவிடுகின்ருன். உண்டு என்று விண்டவர் எவரும் அக்கடவுளைக் கண்டிலர், திண்ணம். “தொட்டவெற் குணரலாம் மற்று உண்டென்னும் சொல்லுமில்லை” என்று இங்கு, பல்லியல்நெறியிற் பார்க்கும் அப்பரம்பொருள் என்ன நிற்கும் பாவையின் இடையைப்பற்றி உரைப்பது, இராமனென்ற பெயருடைய அப்பரம்பொருளேயாதலின், கடவுளிருப்பதும், இருக்குமெனின் அதன் தன்மையும், அக்கடவுளிற்கே தெரியும் என்ன நம்பவேண்டும் என்னும் உறுதியுடைய வொருநெஞ்சம் தன்னையே மெல்லப் பரிகசித்துக்கொள்கின்றது போலும். அருமை மிகுந்த இப்பரிகசத்தைக் காட்டிலும் நுண்ணியதாமோ அத்திருமகள்தன் ஒரு இடை என்ன வியந்து நிற்றலும் இயற்கையே.

காணுத இடையைப்பற்றி இன்னுந் தயங்கவேண்டா. அங்குநின்று வயிற்றின்பால் பாய்கின்ற வருணனைக் கினி வருதல் நலம்.

ஆலிலை படிவந் தீட்டு
    மையநுண் பலகை நொய்ய
பானிறத் தட்டம் வட்டக்
    கண்ணடி பலவு மின்ன
போலுமென் றுரைத்த போதும்
    புனைந்துரை பொதுமை பார்க்கி
னேலுமென் றிசைக்கி னேலா
    விதுவயிற் றியற்கை பின்னும்

[ஆல் இலையையும், சித்திரம் எதுழும் அழகிய நுண்ணிய பலகையும், மெல்லிய பால்போன்ற நிறமுடைய தட்டையும்,வட்டமான கண்ணுடியையும்,இவைபோன்ற பலவற்றையும் ஒத்திருக்குமென்று சொன்னபோதிலும், இத்தகைய புனைந்துரைகள் பொதுவாகப் பார்க்குமிடத்துப் பொருந்தலாம் என்ருல் சிறிதும் பொருந்தாவாம். அவள் வயிற்றின் தன்மை இன்னது. மேலும்]

சிங்கலில் சிறுகூ தாளி
    நந்தியின் றிரட்பூச் சேர்ந்த
பொங்குபொற் றுளைபென் ருலும்
    புல்லிய வுவமைத் தாமா
லங்கவ ளுந்தி யொக்குஞ்
    சுழியெனக் கணித்த துண்டாற்
கங்கையை நோக்கிச் சேறி
    கடலினு நெடிது கற்ருேய்.

[கடலினும் அகன்ற கல்வியுடையவனே, கெடுதலில்லாத சிறு கூதாளிச் செடியும், நந்தியாவர்த்தமும்,என்ற இவற்றின் திரண்ட மலர்களில் உள்ள பெரிய அழகிய துளைகள், உவமையாம் என்று கூறினும் அவை அற்பமான உவமையேயாம். ஆற்றுநீர்ச் சுழியானது அவள் உந்தியை ஒக்கும் என்று நான் எண்ணியது உண்டு.ஆகையால் அதனை அறியவேண்டுமானல் அச்சுழியைப் பார்ப்பதற்குக் கங்காநதியை நோக்கிச் செல்]

மயிரொழுக் கெனவொன் றுண்டால்
    வல்லிசேர் வயிற்றின் மற்றென்
உயிரொழுக் கதற்கு வேண்டு
    முவமையொன் றுரைக்க வேண்டில்
செயிரில்சிற் றிடையா யுற்ற
    சிறுகொடி நுடக்கந் தீரக்
குயிலுறுத் தமைய வைத்த
    கொள்கொம்பென் றுணர்ந்து கோடி.

[கொடிபோன்ற சீதையின் வயிற்றில், மயிரின் ஒழுங்கென்று சொல்லப்படுவது ஒன்று. உண்டு. அது உண்மையில் என் உயிரானது ஒழுகிச் செல்லுந் தோற்றமேயாம். அதற்குப் பொருந்தக்கூடிய உவமையொன்று எடுத்துச் சொல்லவேண்டுமானல், குற்றமற்ற நுண்ணிய இடைப்பு என்று அமைந்த சிறு கொடியானது, துவளாமல் படரும்படி நன்ருகப் பதித்துப் பொருந்தவைத்த ஒரு கொழுகொம்பு ஆகும் என்று உணர்ந்துகொள்.]

அல்லியூன் றிடுமென் றஞ்சி
    யரவிந்தந் துறந்தாட் கம்பொன்
வல்லிமூன் றுளவாற் கோல
    வயிற்றின்மற் றவையு மார
வில்லிமூன் றுலகின் வாழு
    மாதருந் தோற்ற மெய்ம்மை
சொல்லியூன் றியவாம் வெற்றி
    வரையெனத் தோன்று மன்றே.

[மெல்லிய உள்ளிதழ்கள் உறுத்தும் என்று அஞ்சிச் செந்தாமரையைவிட்டு நீங்கிய இலக்குமிபோன்ற சீதைக்கு அழகிய வயிற்றில், அழகிய பொன்னிறக் கொடியின் வடிவமாகிய மடிப்புக்கள் மூன்று உண்டு. அவை, மன்மதனுகிய வில்வீரன், மூன்று உலகங்களிலும் வாழ்கின்ற மாதர்களெல்லாம் சீதையின் அழகிற்குத் தோற்றுப்போன உண்மையைஎடுத்துச்சொல்லிப் பதித்துவைத்தவெற்றிக் கோடுகள் போலத் தோன்றும்]

செப்பென்பென் கலச மென்பென்
    செவ்விள நீருந் தேர்வென்
துப்பொன்று திரள்சூ தென்பென்
    சொல்லுவென் றும்பிக் கொம்பைத்
தப்பின்றிப் பகலின் வந்த
    சக்கர வாக மென்பென்
ஒப்பொன்று முலகிற் காணேன்
    பலநினைந் தலைவெ னின்னும்

[செப்பு என்பேன், கலசம் என்பேன், செவ்விள நீரையும் சொல்லப் பார்ப்பேன், பவழத்தாற் செய்த திரண்ட சொக்கட்டான் காய் என்பேன், யானையின் தந்தங்களைச் சொல்வேன், தவருமல் பகலில் வந்த சக்கரவாகம் என்பேன். இப்படி, ஏற்ற உவமைப்பொருள் ஒன்றும் காணுமல் பல பொருள்களையும் நினைத்து இன்னமும் அலைவேன்.]

சீதையின் வருணனை இராமன் வாயில் இப்படியே இன்னுஞ் செல்லும்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[423-வது பக்கத் தொடர்ச்சி]

8-ம் பத்து 1-ம் தசகம்

1-ம் பாசுரம்

தேவிமா ராவார் திருமகள் பூமி
ஏவமற்ற மராாட் செய்வார்
மேவிய யுலக மூன்றவை யாட்சி
வேண்டுவேண்டு ருவம்நின் னுருவம்
பாவியேன் றன்னை யடுகின்ற கமலக்
கண்ணதோர் பவளவாய் மணியே
யாவியே யமுதே யலைகடல் கடைந்த
வப்பனே காணுமா றருளாய்.

தேவிமார் என்பது-ஸ்ரீதேவி பூமிதேவி, நீளாதேவி என்ற மூன்று திவ்விய மஹிஷிகளையும் குறிக்கும். இங்குத் "திருமகள்" "பூமி" இருவரையும் எடுத்து உரைப்பதால் இப்பதம் "நீளாதேவி"யையுஞ் சேர்த்துக் குறிப்பிடுவதாகக் கொள்ளவேண்டும். திருமகள் முன் இராமாவதாரத்தில்"காரியம்கருணமாரியேண-நகச்சித்நா அபவித்தியஸி.அதாவது"எவ்விதப்பிழை செய்திருந்தாலும் பெரியோராயின் பொறுப்பதுகடனே" என்றும், "யார்தான் குற்றமற்றவர்கள்" என்றும அமைந்த அத் தர்மநீதியைப் பிரகடனம் செய்த ஸீதாபிராட்டியின் பூர்வ அவதாரம். (2)பூமி-"க்ஷமயாபிருதிவி ஸமா" வென்று வால்மீகி இராமாயணத்தில் பகர்வதுபோல் "பொறுமை"க்கு உதாஹரணமானவள்-(3) நீளாதேவி; (4) மற்று அமரர் - வேறு வைகுண்டத்தில் இவர்களைப்போன்று எம்பெருமானின் குணாதிசயத்தில் தோய்ந்து அமர்ந்தவர்கள் - இவர்கள் தமக்குத் தாமே குறிப்பறிந்துகொண்டு ரஸம் உணர்ந்து கைங்கரியம் செய்பவரேனும் அதிசய ரஸாநுபவத்தின்பொருட்டுக் குற்றேவலுக்கு உத்திரவு பெற்ற பெருமிதங்கொண்டு ஸேவை செய்பவராகுவரல்லவோ? (5) ஆள்செய்வார் - தொண்டு செய்ய இப்பொருளின் ஏவல் கிடைக்க வேண்டுமே யென்று ஆசைப்பட்டுக் காத்திருக்கும் முக்தர்கள் நித்தியசூரிகள் முதலானவர். இவர்கள் சேர்த்தியெல்லாருமிருக்க நான் மனவருத்தப் படும்படி இருப்பதோ வென்று சாற்றுகிறபடி. ஆக மேவிய - முன்பே பழகிய. உலகம் மூன்று - நித்தியர் முக்தர் பத்தர் ஆகியமூவகைச்சேதநர்கள். "உலகம் அவை"-இவையெல்லாம் முன்செப்பிய ஐவர் தவிர ஆறுவதாய்"பத்தர்கள்" அதாவது முன்பியற்றிய பாபகர்மங்களால் கர்மவசப்பட்டுத் தத்தம் வினைகளால் ஜந்மங்களெடுத்து நற்கதிகளுக்கும் தீக்கதிகளுக்கும் அகப்பட்டவர்கள்; அதாவது கர்மப்பயனுக்குக் கட்டுபட்டவர்கள். ஆட்சிவேண்டு வேண்டுருவம்-இவற்றையெல்லாம் ஆளுகையின் பொருட்டு எந்தஎந்தக்காலத்தில் என்ன வேற்று உருவம் எடுத்து இரக்ஷிக்கவேண்டுமோ அந்த அந்தச் சிங்க மனுஷனாகவும் குள்ள வாமனனாகவும் மத்ஸியமாகவும் இராமனாகவும் ஸ்ரீகிருஷ்ணபகவானாகவும் அவதாரமெடுத்துக் காப்பாற்றின பலவித ரூபங்கள் உன்னுடைய அவதார ரூபங்கள் அல்லவோ? மூன்றாவதடியில், தற்காலம் தமக்கு உத்தாரம் தாராத திவ்விய சோபையுற்ற திவ்விய மங்கள விக்கிரகம், அன்று மலர்ந்த தாமரைக் கண்களும் பவழவாயும் மணிபோன்ற திவ்விய காந்தியுள்ள எம்பெருமானின் திவ்விய வடிவழகு ஆழ்வாரைத் தற்காலம் திருவுள்ளத்திலிருந்து வெளிக்குத் தோன்றிப் பீடிக்கிறதைப் பாவியாகிய தாம் அநுபவிக்கக் கொடுத்துவைக்காததைப்பற்றிச் சோகப்பட்டு உரைக்கிறபடி. ஆவியே-இத்தனைக்கும் காரணபூதனாயும் இனிய பிரியதரிசன முடையவனாயு மிருப்பவனை எப்படி விட்டுத் தன் ஆவி பிழைத்திருக்கக் கூடுமென் றிவர் கூறுகிறார். அமுதே = அமிர்தமே. "அலைகடல் கடைந்த வப்பனே" என்று விளிப்பது, என்னை உஜ்ஜீவிக்கத் தேவர்களுக்கு க்ஷீராபதியைக் கடைந்து அமிர்தம் தேடிக்கொடுத்ததுபோல் கடினமான வேலையை நிர்வஹித்துக் காப்பாற்றவேண்டிய அவசியமில்லை யென்று தெரிவிக்கைக்காக. காணுமாறு அருளாய் - உன் வடிவழகைக் காண்பித்து ஸேவை கொடுத்தால் போதுமென்று பிரார்த்தனை செய்கிறபடி.

குறிப்பு:—நாம் இதன்முன்பே சென்ற 7 ம் திருவாய்மொழியில் ஆழ்வார் எம்பெருமானைத் தர்சன ஸமமாய் உள் அந்தக்கரணம் திருப்தியடையும்படி கண்களால் விசதமாய்ப் பார்ப்பதுபோல் தபோவலிமையின் ஆவர்த்தியால் "தத்துவேன" திருஷ்டிக்க வேண்டுமென்ற பகவத்கீதையின் திட்டத்துக்கு இணங்க அந்தத் திருவாய்மொழியில் தம்முடைய உதாஹரணத்தால் அதன் நோக்கத்தை விள்க்கிக் காட்டுகிறாரென்று சங்கதி வரைந்துள்ளோம். அங்குப்பாக்க கண்டுகொள்க. இந்த 8-ம் திருவாய்மொழியில் 1-ம் தசகம் 11-ம் பாசுரத்திலேயே "காணுமாறு அருளாய்"-திருவாறன் விளையை அடுத்து எப்போழ்தும் அங்குத் திருநாட்டுள்ள வைபவம்போல் திருக்கோவில் கொண்டு உறையும் எம்பெருமானைத் தரிசித்து ஆனந்தப்படவேண்டுமென்று கீழ்த்தசகத்தில் ஆசைப்பட்டபடி அந்தத் திவ்விய க்ஷேத்திரத்து எம்பெருமான் தனக்குக் கெருடவாகனரூடராய் ஸேவை கொடுக்கவில்லை யென்று கிலேசபடுவதைக் "காணுமாறுஅருளாய்" என்று கூவிக் குறைப்படுகிறதாக ஊஹிக்கக்கூடும். இம்மஹான் அடுத்த 9-ம் பாசுரத்தில் ஸம்ஸாரிகள் நடுவிலும் தேஹபந்தத்திலும் தாமிருப்பதை நரகமாகப் பாவித்துக் கூறுவதாலும் திருநாட்டிலே எம்பெருமான் வீற்றிருக்கும் இருப்பைக் காணுதே இருக்கிற விருப்பைத் தாம் அஞ்சுவதாகவும் அருளிச் செய்வதால் திருநாட்டினது ஏற்றமே இவர் திருவுள்ளமாவது பொருத்தமானது. மேலும் "அருளு நின்தாள்களை யெனக்கே" என்றல்லவோ அப்பாசுரத்தின் முடிவும் துணிவும். இங்கு ஆழ்வார் மனங்கலங்கித் தபித்தவரைப் பகவான் மாசும் வண்டலும் கலந்த ஆற்றுநீரைத் "தேற்றுவித்தால் மாற்றுவிப்பது"போல் ஆழ்வாரின் பரிசுத்தாத்ம சுவ

ரூபத்தை உணர்த்தியும் வானநாட்டிலும் எங்கும் இங்கும்தான் ஏகசுவரூபமாய் எல்லாவற்றிற்கும் இன்றியமையாப் பரஞ்சோதி ஸத்வஸ்து வென்றும் நிரூபித்துத் தெரிவித்தான். இது பின் 9,10ம் பாசுரங்களின் காதையாதலால் அங்கு விவரமாய் வரைவோம்; கண்டுகொள்க.

---

2-ம் பாசுரம்

காணுமா றருளா யென்றே கலங்கிக்
கண்ணீ ரலமர வினையேன்
பேணுமா றெல்லாம் பேணிநின் பேரே
பிதற்றுமா றருளெனக் கந்தோ
காணுமா றருளாய் காகுத்தா கண்ணா
தொண்டனேன் கற்பகக் கனியே
பேணுவா ரமுதே பெரியதண் புனல்சூழ்
பெருநில மெடுத்த பேராளா.

இப்பாசுரத்தின் ஒவ்வொரு சுவடிகளுக்கும் அவதாரிகை வைத்து எந்த எந்தச் சங்கைக்கு அவைகள் பொருள்கள் கூறுகின்றனவென்று மஹானுனமுதல் வியாக்கியாதா ஆறுயிரப்படிக்காரர் பொழிப்புரை வெகு விசதமாய் வகுத்திருப்பதைக் கீழ் வரைந்து தருவோம்.

பொழிப்புரை:—இப்படிக் காணுமாறருளா யென்றன்றே கலங்கிக் கண்ணீர் அலமர வினையேன் இதற்கு மேல் இல்லை யென்னும்படி யாசைப்பட்டாலும் உன் திருநாமங்களைச் சொல்லிக் கூப்பிடப் பெறும் இதுவோ எனக்கு அருளும் அருள்?

இங்ஙணமன்றிக்கே காணுமாறருளாய், காண வேண்டுமோ வென்னில் - காண வேண்டுமென்று அபேக்ஷித்தாருக்குச் சக்கரவர்த்தி திருமகனும் ஸ்ரீ வஸுதேவர் திருமகனும் வந்து திருவவதாரம் பண்ணியன்றோ உன்னைக் காட்டி அருளிற்று. நெஞ்சாலே அநுபவிக்கலாம்படி உன்னை எனக்கு (கற்பகக் கனி) போக்கியமாகத் தந்தருளின பரமோபகாரனல்லையோ? மற்று மாசைப்பட்டார் எல்லார்க்கும் உன்னை இனிதாக அநுபவிக்கக் கொடுக்குமவனல்லையோ. மஹாப் பிரளயத்தில் முழுகிப்போன (பூமி) ஜகத்தையெடுத்து ரக்ஷித்தருளின பரமகாருணிகன் நீயல்லையோ? "காணுமாறு அருளாய்" என்கிறார்"- ஆறுயிரப்படி

---

3-ம் பாசுரம்

எடுத்தபே ராளன் நந்த கோபன்ற
னின்னுயிர்ச் சிறுவனே யசோதைக்
கடுத்தபே ரின்பக் குலவிளங் களிறே
யடியேன் பெரிய வம்மானே
கடுத்தபோ ரவுண னுடலிரு பிளவாக்
கையுகி ராண்டவெங் கடலே
யடுத்ததோ ருருவா யின்றுநீ வாராய்
யெங்ஙனம் தேற்றுவர் உமரே.

பதக் குறிப்பு:—உமர்-உம்முடையவர். எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதில் அமர்ந்தவர். கையுகிர் - நகங்களே கையாகவமைந்த நரசிங்கமூர்த்தி- ஆண்ட - அந்நகங்களை ஆயுதமாக்கிஅவுணனை இருபிளப்பாகக் கையாண்டு கொன்று முடித்தவன். எங் கடலே - ஆச்ரிதரிடத்தில் அளவில்லாப் பிரியமும் பற்றுமுள்ள உத்தமகுணங்களுக்கு இருப்பிடமே. ஒவ்வொரு பாசுர பதத்தையும் தழுவி ரஸமாயும் சுருக்கமாயும் மொழியும் ஆறுயிரப்படி உரை எடுத்து எழுதற்பாலது.

"யாதொருமுயற்சியும் இல்லாமலிருக்கையில் நிதியைக் கண்டெடுத்தாப்போல் எடுத்தனுபவிக்கலாகும்படி நந்தகோபாலனுக்கும் யசோதைப்பிராட்டிக்கும் விளையாட்டாய் எடுத்துஅருளும்படி சுலபனுய்ப் பிரஹலாதாழ்வான் அன்று செய்த பிரிதஞ்ஞை நிறைவேற்றவேண்டி அவனிடத்தில் மிக்க விரோதபாவங் கொண்ட அசுரனைச் சமயத்துக் குசிதமானசிம்மரூபமெடுத்து ஸம்ஹரித்து உன்னுடைய அளவில்லாத ஆச்ரிதவாத்ஸல்ய குணத்தைப் பிரகடநம் செய்தவனே! இன்றைக்கு நீ ஆச்ரிதனை வெனக்கு அசரீரியையாயிருந்துதோன்றுமலிருக்கிறாயே? வாராதொழிந்தக்கால் உன்னுடைய ஆச்ரிதஜனங்கள் எப்படி உன்னை நம்புவார்கள். பக்தர்கள் எல்லாரும் தம் மனதில் உறுதியாகத் தேறும்படி நீ என் அபேக்ஷையைச் செய்து முடிக்கவேணும் - என்கிறார்.

---

4-ம் பாசுரம்

உமருகந் துகந்த வுருவேநின் னுருவாகி
யுன்றனக் கன்ப ரானா
ரவருகந் தமர்ந்த செய்கையுன் மாயையறி
வொன்றும் சங்கிப்பன் வினையே
னமரது பண்ணி யகலிடம் புடைசூ
ழடுபடை யவித்த வம்மானே
யமரர்த மமுதே அசுரர்க ணஞ்சே
யென்னுடை யாருயி ரேயோ.

பதக்குறிப்புகள்:-3-ம்அடி:-அமரது-அது + அமர் என்று மாற்றிப் பொருள்கொள்க. அது-அந்தப் பிரஸித்தமான-அமர்-பாரதப்போரை; பண்ணி-செய்து முடித்து; அகலிடம் புடைசூழ்அடுபடை-உலகமெல்லாம் பரவிப் போர்களால் பற்பல தீங்கு இயற்றிய சேனைகளை; அழித்த - ஸம்ஹாரம் செய்த, அம்மானே - பெருந் தெய்வமே. 4-ம் அடி - அமரர் தம் அமுதே - உன்னை யாச்ரயித்து உன்னுடன் வாழும் நித்தியஸூரி முதலானவானவருக்குக் களிப்புஊட்டுபவனே; அசுரர்கள் நஞ்சே - ஆசுரப் பிரகிருதியாயுள்ள தீயோர்கள் அடியாருக்குத் தீனம் செய்யவிட்டாதே அவர்களை நாசம் செய்யும் சுபாவமுடையவனே. என்னுயிரே - என்னுயிர்த் துணையே - 1-ம் அடி - உமர் உகந்து உகந்த உருவே - உன்னுடைய பக்தர்கள் இந்த இந்த ரூபங்கள்தான் எங்களுக்கு மிகப் பிரியமானதென்று ஆசைப்படுகிறார்களோ அவற்றையே உனக்குத் திருமேனியாய்க்கொள்பவனே - உன் தனக்கு அன்பர் ஆனவர்-உகந்து-விசேஷப்பிரியமாய்க்கொண்டு,அமர்ந்தசெய்கை-உன்னுடையஎந்த விளையாட்டுகளிலே மனம்ஊன்றி ரஸாநுபவஞ்செய்கிறார்களோ அவற்றிலேயே அவர்களை நிலை நிறுத்தி, உன் மாயை - அவர்களை உன்னை யகலாதே ஸதாஸார்வகாலமும் அநுபவிக்கும்படி செய்யவல்ல ஆச்சரிய சக்தி அறிவு ஒன்றுமே-விசேஷமாய் நான்உன்னையேநம்பி உன்னையில்லாமல் உய்வு இல்லை என்று உறுதிகொண்ட ஞானத்தையுங்கூட, வினையேன் என்னை இது வரையில் உனக்கு ஆளாக்கிய ஒரு நற்பயனை இழக்கும்படி செய்யும் பாபங்கள் இயற்றியதால் அடியேன், சங்கிப்பன் - மேல்சொன்னபடி என் பாகங்களாலே உன் மாயாசக்தியும் பொய்யோவென்று நீ கூப்பிட்டும் வாராமையாலே பயந்து சந்தேகிப்பேன்.

---

# கலித்தொகை

[431-வது பக்கத் தொடர்ச்சி]

### மருதக்கலி 10

'ஒவ்வொருநாளும் மணம்செய்தற்குரிய நாளாக இருக்குமானால் அந்தந்த நாளில் புதிய புதிய பரத்தையரை மணத்தலில் தலைவன் மனமுடையவனாய் இருத்தலை எண்ணி எண்ணியான் என்றும் வருந்துகின்றேன், நீயோ அவனைக் கண்ட அளவிலேயே ஊடல் தீர்கின்றாய்' என வருந்திமொழிந்த தோழிக்குத் தலைவி கூறியதைக் கூறுவது இச் செய்யுள்.

நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
நேரித ழாம்ப னிரையிதழ் கொண்மார்
சீரார் சேயிழை யொலிப்ப வோடு
மோரை மகளி ரோதை வெரீஇயெழுந்
தார லார்கை யஞ்சிறைத் தொழுதி
யுயர்ந்த பொங்க ருயர்மர மேறி
யமர்க்கண் மகளி ரலப்பிய வந்நோய்
தமர்க்குரைப் பனபோற் பல்குரல் பயிற்று
முயர்ந்த போரி னொலிநல் லூரன்
புதுவோர்ப் புணர்தல் வெய்ய னாயின்
வதுவை நாளால் வைகலு மஃதியா
னோவேன் றோழி நோவாய் நீயென
வெற்பார்த் துறுவோய் கேளினித் தெற்றென.

எல்லினை வருதி யெவன்குறித் தனையெனச்
சொல்லா திருப்பே னாயி னொல்லென
விரியுளைக் கலிமான் றேரொடு வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்ப லென்றும்

வாடிய பூவொடு வாரலெம் மனையென
வூடி யிருப்பே னாயி னீடா
தச்சா றாக வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுவல்

பகலாண் டல்கினை பரத்த வென்றியா
னிகலி யிருப்பே னாயிற் றான்றன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயி றுஞ்சும்

ஆங்க

விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவு
மாங்கவிக் தொழியுமென் புலவி தாங்கா
தவ்வவ் விடத்தா னவையவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கு
மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் றோழி கடனமக் கெனவே.

#### தரவு

(வரி 1 - 13) நீர் ஆர் செறுவின் - நீர் பொருந்திய வயலிலே, நெய்தலொடு நீடிய - நெய்தல் மலரோடு வளர்ந்த, நேர் இதழ் ஆம்பல் - நேர்மையான இதழ்களையுடைய ஆம்பலினது, நிரை இதழ் - மலர்களை, கொண்மார் - கொள்ள, சீர் ஆர் சேயிழை - "சிறப்புப் பொருந்திய செம்பொன்னாலாகிய ஆபரணங்கள், ஒலிப்ப ஓடும் - ஒலி செய்ய ஓடுகின்ற, ஓரை மகளிர் - விளையாட்டினையுடைய பெண்களின், ஓதை - ஓசையால், வெரீஇ எழுந்து - பயந்து எழுந்து, ஆரல் ஆர்கை - ஆரல் மீன்களை உண்ணுதலையுடைய, அம்சிறை தொழுதி - அழகிய சிறகுகளையுடைய பறவைகளின் கூட்டம், உயர்ந்த பொங்கர் - உயர்ந்த கிளைகளையுடைய, உயர்மரம் ஏறி - உயர்ந்த மரங்களில் ஏறி, அமர் கண் மகளிர் - போர் செய்தலையுடைய கண்களைப்பெற்ற பெண்கள், அலப்பிய - வருத்திய, அந்நோய் - அந்த நோயை, தமர்க்கு உரைப்பன போல் - அவர்கள் சுற்றத்தார்க்குச் சொல்லுவனபோல, பல் குரல் பயிற்றும் - பல குரலாலே பலகாலும் சொல்லும், உயர்ந்த போரின் ஒலி நல் ஊரன் - உயர்ந்த போரின் ஒலி பொருந்திய நல்ல ஊருக்குத் தலைவன், புதுவோர் - புதிய மகளிரை, புணர்தல் வெய்யனாயின் - எக்காலமும் மணம் செய்தலை விரும்புவானாயின், வைகலும் - (அதற்கேற்ப) நாள்களும், வதுவை நாளால் - மணம் செய்தற்குரிய நாள்களாக இருக்குமானால், அஃது யான் நோவேன் - அவ்வொழுக்கத்திற்கு யான் வருந்துவேன், தோழி நோவாய் நீ - தோழியே நீ வருந்துகின்றாயில்லை, என என் பார்த்து - என்று என்னைப் பார்த்து, உறுவோய் - வருத்தமுறுகின்றவளே, இனி - இப்பொழுது, தெற்றென கேள் - தெளிவாகக் கேள்.

நிரை இதழ் என்பது மலர்களுக்குப் பெயராய் நின்றது.

#### தாழிசை

(வரி 14 - 17) எல்லினை வருதி - (மணம் கொண்ட பிறகு) விளக்கமுடையவனாய் வருகின்றாய், எவன் குறித்தனை என - (எம்மைப்பற்றி நீ) என்ன நினைத்தாய் என்று கூறி, சொல்லாதிருப்பேன் - வேறு ஒரு வார்த்தையும் சொல்லாதிருப்பேன் (என்று எண்ணுவேன்) ஆயின் - ஆனால், ஒல் என - திடீரென, விரிஉளை - பரந்த பிடரிமயிரினையும், கலி - மனச் செருக்கினையுமுடைய, மான் தேரொடு வந்த - குதிரைகள் கட்டப்பெற்ற தேரொடு வந்த, விருந்து எதிர் கோடலின் - விருந்தினரை எதிர் கொள்ளுதலினாலே, என்றும் - எப்பொழுதும், மறப்பல் - அதனை மறப்பேன்.

(வரி 18-21) வாடிய பூவோடு எம்மனை வாரல் - பரத்தையரைக் கூடியதால் வாடிய பூவோடு எம் வீட்டிற்கு வாராதே, என ஊடி இருப்பேன் - என்று ஊடி இருப்பேன் [என்று எண்ணுவேன்], ஆயின் - ஆனால், நீடாது - நீடியாமல், அச்சு ஆறாக - (தன் பொய்க்கு நாம் அஞ்சும்) அச்சமே வழியாகக்கொண்டு, உணரிய வருபவன் - நம் ஊடல் நீக்குதற்கு வருபவனது, பொய் சூள் அஞ்சி - பொய்ச் சத்தியத்திற்குப் பயந்து, புலவேன் ஆகுவல் - ஊடாதவளாவேன்.

அவனது பொய்ச் சூள் அஞ்சுதலாவது அவன் செய்யும் பொய்ச் சத்தியத்தினால் தமக்குத் தீங்கு வருமென்று அஞ்சுதல்.

(வரி 22-25) பகல் ஆண்டு அல்கினை - பகல் பரத்தையர் சேரியாகிய அவ்விடத்தே தங்கினாய், பரத்த - பரத்தைமையை யுடையவனே, என்று யான் இகலி இருப்பேன் - என்று யான் அவனோடு மாறுபட்டிருப்பேன் (என்று எண்ணுவேன்), ஆயின் - ஆனால், தான் - தலைவன், தன் முதல்வன் பெயர் - தன் தந்தையின் பெயரை, முறை யுளி பெற்ற - முறையால் பெற்ற

புதல்வன் புல்லி - புதல்வனைத் தழுவிக்கொண்டு, பொய் துயில் துஞ்சும் - பொய்யான தூக்கம் தூங்குவான்.

உளி என்பது மூன்றும் வேற்றுமைப் பொருள் படவ தோர் இடைச்சொல்.

### தனிச்சொல்

ஆங்க - அசை.

### சுரிதகம்

(வரி 27-33) அவ்வவ் இடத்தான் - அந்தந்த இடத்தில், அவை அவை காண - (புலவியால் அந்தந்த மகளிர் செய்த) அந்தந்த வடுக்களைக் கண்டு, பூங்கண் மகளிர் புனை நலம் சிதைக்கும் - அழகிய கண்களையுடைய பெண்களின் அழகினைக் கெடுக்கும், மாய மகிழ்நன் - மாயத்தன்மையை யுடைய கணவன், பரத்தைமை - பரத்தைமைக்கு, தோழி - தோழியே, நோவேன் - வருந்துவேன், கடன் நமக்கு எனவே - கடன் நமக்கு என்றே, (ஆயினும்) விருந்து எதிர்கொள்ளவும் - விருந்தினரை எதிர்கொள்ளுதலினாலும், பொய் சூள் அஞ்சவும் - பொய்ச் சத்தியத்திற்கு அஞ்சுதலினாலும், அரும் பெறல் புதல்வனை முயங்க காணவும் - பெறுதற்கு அருமையான மகனைக் கட்டி அணைத்துக்கொள்ளுதலைக் காணுதலினாலும், என் புலவி - எனது ஊடல், தாங்காது - தங்காமல் ஆங்கு - அப்பொழுதே, அவிந்து ஒழியும் - கெட்டு நீங்கும்.

காண - எச்சத்திரிபு.

---

## மருதக்கலி 11

தனக்கொத்த தலைவனோடு தலைவி களவு ஒழுக்கம் நிகழ்த்துகின்றாள் என்பதை அறிந்தும் அறியாதவள் போல வினவிய தோழிக்குத் தலைவி கூறியதைக் கூறுவது இச் செய்யுள்.

**இது மருதத்தில் குறிஞ்சி வந்த திணைமயக்கம்.**

புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்து
மணிவரி தைஇயுநம் மில்வந்து வணங்கியு
நினையுபு வருந்துமிந் நெடுந்தகை திறத்திவ்வூ
ரிசியளென் றெடுத்தோதற் கனையையோ நீயென
வினவுதி யாயின் விளங்கிழாய் கேளினி

செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்று யென்றவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்
கௌவைநோ யுற்றவர் காணாது கடுத்தசொல் [கோ
லொவ்வாவென் றுணராய்நீ யொருநிலையே யுரைத்
[தனை

ஒடுங்கியாம் புகலொல்லேம் பெயர்தர வவன்கண்டு
நெடுங்கய மலர்வாங்கி நெறித்துத்தந் தனைத்தற்கோ
விடுந்தவர் விரகின்றி யெடுத்தசொற் பொய்யாகக்
கடிந்தது மிலையாய்நீ கழறிய வந்ததை

வரிதேற்றாய் நீயென வணங்கிறை யவன்பற்றித்
தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய்
[தனைத்தற்கோ
புரிபுநம் மாயத்தார் பொய்யாக வெடுத்தசொல்
லுரிதென வுணராய்நீ யுலமந்தாய் போன்றதை

எனவாங்கு

அரிதினி யாயிழா யதுதேற்றல் புரிபொருங்
கன்றுநம் வதுவையு ணமர்செய்வ தின்றீங்கே
தானயந் திருந்ததிவ்வூ ராயி னெவன்கொலோ
நாஞ்செயற் பால தினி

### தரவு

(வரி 1-5) புனை இழை - (நான்) அணிந்த ஆபரணங்களை, நோக்கியும் - இருக்கவேண்டிய இடங்களில் இருக்கும்படி திருத்தியும், புனல் ஆட - நாம் நீரில் விளையாட, புறம் சூழ்ந்தும் - (நமக்கு ஒரு ஆபத்தும் உண்டாகாதவாறு) சுற்றிவந்தும், மணிவரி - அழகிய தொய்யிலை, தைஇயும் - என் தோள்களின்மேல் எழுதியும், நம் இல் வந்தும்-நமது சிறிய மண் வீட்டின்கண் வந்து, வணங்கியும்-குற்றேவல் செய்தும், நினையுபு வருந்தும்- என்னோடு கூடுதல் எப்பொழுது வாய்க்குமோ என்று நினைத்து வருந்துகின்ற, இந்நெடுந்தகை திறத்து - இந்தப் பெரியோனிடத்து, இசியள் என்று - களவு ஒழுக்கத்தை உடையாள் என்று, இவ்வூர் எடுத்து ஓதற்கு - இவ்வூரிலுள்ள மங்கையர் எடுத்துச் சொல்லுதற்கு, நீ அனையையோ என - நீ அப்படிக் களவு ஒழுக்கமுடையவளாய் இருக்கின்றாயோ என்று, வினவுதியாயின் - நீ என்னைக் கேட்பாயானால், விளக்கு இழாய் - விளங்குகின்ற அணிகளையுடையவளே, இனி கேள் - இப்பொழுது கேட்பாயாக.

தொய்யில் - பாலைக்கலி 17-ம் செய்யுளின் உரையை நோக்குக. இசியள் என்பது குறிப்புமொழி.

### தாழிசை

(வரி 6 - 9) கௌவை நோய் உற்றவர் - அலர் தூற்றுதலாகிய நோயையுடையவர், காணாது - (நேரில்) காணாமல், கடுத்த சொல் - ஐயுற்றுச் சொல்லிய சொற்கள், ஒவ்வா என்று உணராய் - எனக்குப் பொருந்தமாட்டா என்று அறியாயாய், நீ ஒரு நிலையே - நீயும் அவர்கள் போலவே, உரைத்ததை-சொன்னது, செவ்விரல் சிவப்பு ஊர - உனது சிவந்த விரல்களில் சிவப்பு நிறம் பரவ, சேண் சென்றாய் என்று - பறிப்ப நெடுநேரம் கொண்டாய் என்று, அவன் - அப்பெருந்தகை, பௌவ நீர் - கழி நீரிலுள்ள, சாய் கொழுதி - தண்டான் கோரையைப் பறித்து, பாவை தந்த அனைத்தற்கோ - பாவை செய்துதந்த அப்பேருபகாரத்திற்கோ !

பௌவம் - கடல்; அது இங்கு அதன் அருகிலுள்ள கழிக்கு ஆயிற்று; ஆகுபெயர்.

(வரி 10-13) விடுத்தவர் - (கற்புடைய மகளிரால் தீயர் என) விடப்பட்ட பெண்கள், விரகு இன்றி - அறிவு இன்றி, எடுத்த சொல் - கட்டிச் சொல்லிய சொற்களை, பொய்யாக-பொய்யாகக் கொண்டு,கடிந்ததும் இலையாய்-நீ பராமுகம் செய்யாதவளாய், நீ கழறிய வந்ததை - நீ என்னைக் கண்டித்துக் கூற வந்தது, ஒடுங்கி - உடல் கூசி, யாம் புகல் ஒல்லேம் - நாம் நுழைவதற்கு முடியாதவர்களாய், பெயர்தர - மீள, அவன் கண்டு - அதனை அவன் பார்த்து, நெடும் கயம் மலர் வாங்கி - நீண்ட கயத்திலுள்ள மலரைப் பறித்து, நெறித்து - புற இதழ்களை நீக்கி, தந்த அனைத்தற்கோ - கொடுத்த அந்தப் பேருபகாரத்திற்கோ !

தந்த, விடுத்த - விகாரம்

(வரி 14-17) புரிபு - விரும்பி, நம் ஆயத்தார் பொய்யாக - நமது ஆயத்தாருடைய காவல் பொய்யாகப் போகும்படி, எடுத்த சொல் - கட்டிச் சொல்லிய சொற்கள், உரிது என-எனக்கு உரித்து என்று, உணராய் நீ உலமந்தாய் போன்றதை - அறியாதவளாய் நீ பித்துக்கொண்டவள் பேன்று சொல்லுதல், வரிதேற்றாய் நீ என-சித்திரம்

எழுதற்கு அறியாய் நீ என்று, வணங்கு இறை - உனது வணங்கிய முன்கையை, அவன் பற்றி - அவன் பிடித்துக் கொண்டு, தெரி வேய் தோள் - தெரிந்தெடுக்கப்பட்ட மூங்கில் போலும் தோள்களில், கரும்பு எழுதி-கரும்பின் உருவத்தை எழுதி, தொய்யில் செய்த அனைத்தற்கோ-தொய்யிலை எழுதிய அப்பேருபகாரத்திற்கோ !

தனிச் சொல்

என - என்று யான் கூறும்படியாக,

ஆங்கு - அசை

சுரிதகம்

ஆய் இழாய் - ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஆபரணங்களை யுடையவளே, அது தேற்றல்-(நின் மனத்தே கொண்ட) அந்த ஐயத்தைத் தெளிவித்தல், இனி அரிது-இப்பொழுது அருமை, புரிபு ஒருங்கு-விரும்பி ஒன்றாகச் சேர்ந்து, அன்று நம் வதுவையுள் - அன்று நம் கலியாணத்தில், நமர் செய்வது - நம் உறவினர் செய்யப் போவதை, இன்று ஈங்கே - இப்பொழுது இவ்விடத்தே, நயந்திருந்தது - விரும்பியிருந்தது, இவ்வூராயின் - இவ்வூராயின், இனி நாம் செயற்பாலது எவன்-இப்பொழுது நாம் செய்தற்குரிய காரியம் என்ன.

தான், கொல், ஓ - அசை.

அன்று - எதிர்காலத்தைக் குறித்தது.

ஊர் என்பது ஊரிலுள்ள பெண்களை.

---

## மருதக்கலி 12.

பரத்தையர்சேரியிற் சென்றுவந்த தலைவனோடு ஊடிய தலைவி, அவன் குணமிலாச் செய்கையைக் காட்டும் முகத்தால் ஊடல் தீர்கின்றவளாய்க் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

இணையிரண் டியைந்தொத்த முகைநாப்பட் பிறிதியா
துணையின்றித் தளைவிட்ட தாமரைத் தனிமலர் [துந்
திருமுக மிறைஞ்சினள் வீழ்பவற் கினைபவ [ற்
ளரிமதர் மழைக்கண்ணீ ரலர்முலைமேற் றெறிப்பபோ
றகைமலர்ப் பழனத்த புள்ளொற்ற வொசிந்தொல்கி
மிகநனி சேர்ந்தவம் முகைமிசை யம்மல
ரகவிதழ்த் தண்பனி யுறைத்தரு மூரகேள்

தண்டளிர்த் தகைபூத்த தாதெழி னலஞ்செலக்
கொண்டுநீ மாறிய கவின்பெறல் வேண்டேன்ம
னுண்டாதல் சாலாவென் னுயிர்சாத லுணர்ந்துநின்
பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்

பொன்னெனப் பசந்தகண் போதெழி னலஞ்செலத்
தொன்னல மிழந்தகண் டுயில்பெறல் வேண்டேன்ம
னின்னணங் குற்றவர் நீசெய்யுங் கொடுமைக
ளென்னுழை வந்துநொந் துரையாமற் பெறுகற்பின்

மாசற மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்தல் [ம
வீசேர்ந்து வண்டார்க்குங் கவின்பெறல் வேண்டேன்
னோய்சேர்ந்த திறம்பண்ணி நின்பாண னெம்மனை
நீசேர்ந்த இல்வினாய் வாராமற் பெறுகற்பின்

ஆங்க

கடைஇய நின்மார்பு தோயலமென்னு
மிடையு நிறையு மெளிதோநிற் காணிற்
கடவுபு கைத்தங்கா நெஞ்சென்னுந் தம்மோ
டுடன்வாழ் பகையுடை யார்க்கு.

தரவு

(வரி 1-7) இணை இரண்டு - நெருங்கிய இரண்டு, இயைந்து ஒத்த - தம்மில் மிகவும் ஒத்த, முகை நாப்பண்-மொக்குகளின் மத்தியில், பிறிது யாதும் துணை இன்றி-வேறு மலர் ஒன்றும் பக்கத்தில் இல்லாமல், தளைவிட்ட-மலர்ந்த, தாமரை தனி மலர் - தாமரையாகிய பெரிய மலர், திருமுகம் இறைஞ்சினள் - அழகிய தன் முகம் கவிழ்ந்தவளாய், வீழ்பவற்கு இனைபவள் - தான் அன்பு கொண்ட தலைவனை நினைத்து வருந்துபவளுடைய, அரி மதர் மழை கண்ணீர்-செவ்வரி படர்ந்த அழகிய குளிர்ச்சி பொருந்திய கண்ணின் நீர், அலர்முலைமேல் தெறிப்ப போல்-பரந்த அவள் முலைமேல் சிந்துதல்போல, தகை மலர் பழனத்த - பெருமை பொருந்திய மலர்ப் பொய்கையிலுள்ள, புள் ஒற்ற- நீர்ப்பறவைகளின் உடல் தீண்ட, ஒசிந்து ஒல்கி-சாய்ந்து வளைந்து, மிக நனி சேர்ந்த - மிகவும் அதிகமாக இணைந்த, அம்முகை மிசை - அந்த மொக்குகளின் மேல், அம்மலர் - அந்த மலர்ந்த தாமரை, அக இதழ் - தனது உள் இதழ்களிலுள்ள, தண் பனி - குளிர்ந்த பனி நீரை, உறைத்தரும் - துளிக்கின்ற, ஊர கேள் - ஊரை யுடையவனே கேட்பாயாக.

காதலனை நினைத்துத் தன் இரு முலைகளின் மேல் முகம் கவிழ்ந்து வருந்தும் தலைவியின் கண்ணீர் அவள் முலைகளின்மேல் சிந்துதல்போல, இணைந்த இரண்டு மொக்குகளின்மேல் வளைந்து நின்ற மலர்ந்த தாமரையின் உள்நீர் அம்மொக்குகளின்மீது சிந்துகின்றதெனக் கொள்க.

'இயைந்து ஒத்த' என்பது ஒருபொருட் பன்மொழி.

தாழிசை

(வரி 8-11) உண்டாதல் சாலா - உண்டு என்று கூறுதல் அமையாத, என் உயிர் - எனது உயிர், சாதல் உணர்ந்தும் - அழிதலை அறிந்தும், நின் பெண்டு என - நினது மனைவி என்று, பிறர் கூறும் - பிறர் சொல்லுகின்ற, பழி மாற பெறுகற்பின் - பழியானது மாறப்பெறுவேனாயின், தண் தளிர் - குளிர்ச்சி பொருந்திய மாந்தளிரிலே, தகை பூத்த - அழகாகச் சிந்திய, தாது - மகரந்தப்பொடி போன்ற, எழில் நலம்-அழகினையுடைய மாமையும் சுணங்கும், செல-என்னிடத்தினின்றும் போகும்படி, கொண்டு-வாங்கிக்கொண்டு, நீ மாறிய - நீ பின்பு ஒருகாலும் தாராமல் விட்ட, கவின்பெறல் வேண்டேன்-அழகைப் பெறுதலை விரும்பேன், மன் - அதனால் பயன் என்ன? அது தான் பெறல் அரிதே.

பெறுகற்பின் என்பது வினைத்திரிசொல்.

மாமையும் சுணங்கும் அமைதலால் ஆம் கவின், மணங் கொண்ட மங்கையர்பால் இல்லையாயின், அன்னாரைத் தலைவரால் விடப்பட்ட மங்கையர் எனப் பிற மகளிர் பழிப்பர் ஆதலின் ஈண்டுத் தலைவி 'நின் மனைவி என்று என்னைப் பிறர் கூறும் சொல் இல்லையாயின் என் மாட்டிருந்து நீ பறித்துக்கொண்ட கவினைப் பெறவிரும்பேன் யான்'' எனக் கூறுகின்றாள்.

(வரி 12-15) நின் அணங்கு உற்றவர்-நின்னால் வருத்தமுற்ற பரத்தையர், நீ செய்யும் கொடுமைகள் - நீ செய்கின்ற கொடுமைகளை, என்னுழை வந்து - என்னிடத்தில் வந்து, நொந்து உரையாமல் - வருந்தி உரையாமலிருத்தலை, பெறுகற்பின் - பெறுவேனாயாயின், போது எழில்-நீல மலர்களின் அழகைக்கொண்ட, நலம் - அழகு, செல-போகும்படி, பொன் என கண் பசந்த - பொன்போலக்

கண்கள் பசந்தன, (அவ்விதம்) தொன்நலம் இழந்த கண்-பழைய அழகினை இழந்த அக்கண்கள், துயில்பெறல் - தூக்கத்தினைப் பெறுதலை, வேண்டேன் - விரும்பமாட்டேன், மன் - அதனால் பயன் என்ன? அதுதான் பெறுதற்கு அரிதே!

(வரி 16-19) நோய் சேர்ந்த - துன்பத்தோடு கூடிய, திறம் பண்ணி - தன்மையையுடைய இராகத்தைப் பண்ணிக்கொண்டு, நின் பாணன் - நினது பாணன், எம்மனை-எமது வீட்டிற்கு, நீ சேர்ந்த இல்வினாய் - நீ சேர்ந்துள்ள வீட்டைக் கேட்டுக்கொண்டு, வாராமல் - வாராதிருத்தலை, பெறுகற்பின் - யான் பெறுவேயானாயின், மாசு அற மண்ணுற்ற - குற்றம் நீங்கக் கழுவுதலுற்ற, மணி எசு - நீல மணியை நீ எனக்கு ஒப்பாக மாட்டாய் என்று இகழும், இருங்கூந்தல் - கரிய கூந்தல், வீ சேர்ந்து - மலர் சேர்ந்து, வண்டு ஆர்க்கும் - வண்டு ஒலி செய்யும், கவின் பெறல் வேண்டேன் - அழகைப் பெறுதலை விரும்பமாட்டேன், மன் - அதனால் பயன் என்ன? அதுதான் பெறுதற்கு அரிதே.

எம்மனை வேண்டேன் பன்மை ஒருமை மயக்கம்.

தனிச்சொல்

ஆங்க - அசை.

சுரிதகம்

(வரி 21-24) கடவுபு - எம்மை உன்னிடம் செலுத்தி, கை தங்கா - எம்மிடத்தில் நில்லாத, நெஞ்சு எனும் - மனம் என்னும், தம்மோடு உடன் வாழ்-தம்மோடு உடன் வாழ்கின்ற, பகை உடையார்க்கு - உட்பகை உடையவர்க்கு, கடை இய - காமத்தைக் கடைந்த, நின் மார்பு - நினது மார்பை, தோயலம் - கூடமாட்டோம், என்னும் இடையும் - என்று கருதும், நிறையும் எளிதோ - நிறை என்னும் குணத்தையும் பெறுதல் எளிதோ?

'காமம் பொங்கக் கடைந்திடுகின்ற...மார்பம்' என்றார் சிந்தாமணியிலும் (711)

'நிறையும்' என்பதன் உம்மை உயர்வுசிறப்புப் பொருளது.

# அணியிலக்கணம்

[189-வது பக்கத் தொடர்ச்சி]

உடனிகழ்ச்சியணி— ஸஹோக்தி யலங்காரம்.

சொல்லப்படு பொருளும் அதனைச் சொல்லும் வகையும், கேட்போர் உவக்கக் கட்டுரை சுவைபடும் படி அமையுந் தரமே அணியெனப்படுவதாம். கவிதைக்குக் கைத்துணையாய் நின்று, எந்நிலையிலும் எச்செயலிலும் எக்காலத்திலும் ஒரு முழுமையின் நினைவை எழுப்பித்தருகின்ற உள்ளத்தின் ஊக்கமே அணிகளின் அமைப்பிற்கு ஆதாரமாக நிற்கின்ற ஒரு தத்துவம் ஆகுமென்பதும் இதன்முன் விளக்கப் பெற்றிருக்கின்றது. இந்தச் செய்தியை, பாவிக அணியையும் தன்மையணியையும் ஆராய்ந்த கட்டுரைகளிற் கண்டோம். இறந்தகால எதிர்கால நிகழ்ச்சிகளை நிகழ்காலத்து நிகழ்ச்சிபோல் சித்திரஞ்செய்து காட்டுந் திறத்தினால் பாவிக அணி காலத்தின் வேற்றுமையைக் கடந்து நிற்கின்றது. அப்படியே, தன்மையணியானது, புலவனது உள்ளத்திற்கே உரிய ஒரு பொருளைப் புறத்திலுள்ள ஒரு பொருளாகச் சித்திரஞ் செய்து காட்டுந் திறத்தினால் இடத்தின் வேற்றுமையைக் கடந்து நிற்கின்றது. காலமும் இடமும் கணித்து விவகரித்தல் சிறு மானுடர் தொழில்; அவைகளைக் கடந்தவோர் முழுமையில் முழுகித் திளைத்தல் வாழ்க்கையை அழகு செய்யும் புலமையின் சிறந்த தத்துவம். பாவிகஅணியும் தன்மையணியும் இந்தச் சிறப்பைக் காட்டுகின்றன.

காலமும் இடமும்போல், மனத்தின் அகலத்திற்கு எல்லைவைத்து இடையூறுசெய்வது, காரண-காரியத் தொடர்பின் நினைவாம். ஒன்றினைக் காணும் போது அது ஒரு காரணத்தின் காரியமாகவேனும், அல்லது அது வேறொன்றிற்குக் காரணமாகக் கூடியதையேனும் நினைப்போமாயின் அந்நினைவு முழுமையுணர்விற்கு மாறாகிநடக்கும் பயிற்சிக்கு அடையாளமே யன்றி வேறன்று. அந்நினைவில் அழகுமில்லை. எனின், காரணமும் காரியமுமாய்த் தொடர்ந்து நிகழ்கின்றபோது, அவைகளை முன்பின் நிகழ்ச்சியாய்க் கருதாமல் அவை யிரண்டும் உடன் நிகழ்வன போல் சேர்த்து உரைக்குந் திறமையால் புலமையின் நுட்பம் புலப்படுதல்கூடும். இதனைத்தான் இலக்கண நூல்கள் உடனிகழ்ச்சி அணி என்று அழைக்கும். இதனை வடநூலார் ஸஹோக்தி யலங்காரம் என்று கூறுவார். தண்டியலங்காரத்திலும் மாறனலங்காரத்திலும் இது புணர்நிலை யணி என்னும் பெயருடன் காணப் பெறுகிறது. ஒருங்கியலணி என்பது இதற்கு வீரசோழியம் இட்டிருக்கின்ற பெயர். குவலாயனந்தத்தில் இது உடனவிற்சியணி என்னும் பெயரால் வழங்கும்

உடனிகழ்ச்சி = உடன் நிகழ்ச்சி = ஒன்றாகநிகழ்வது.
உடனவிற்சி = உடன் + நவிற்சி = ஒன்றாகச் [சொல்லுதல்.
ஒருங்கியல் = ஒருங்கு + இயல் = ஒன்றாக அமைதல்.
புணர்நிலை = ஒன்றாகச் சேர்தல்.

என்ன இந்தப் பெயர்களெல்லாம் ஒரு பொருளையே குறிக்கின்றன. இவ்வணியை விசாகப்பெருமாளையர் அழைக்கின்றபடி, உடனிகழ்ச்சி யணியென்றே நாமும் அழைப்போம். அதன் இலக்கணத்திற்கு இந்தப் பெயர் சிறிது பொருத்தம் மிக்கதாகி இருக்கின்றது.

நளவெண்பாவில், சுயம்வரத்திற்கு முன்னிரவு தமயந்தி விரகநோயால் வருந்தியவாறெல்லாம் புகழேந்திப் புலவர் வருணித்து, இறுதியில்,

பூசுரர்தங் கைமலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாச
மலர்ந்தேந்தங் கோதையா ளாழ்துயரத் தோடு
புலர்ந்ததே யற்றைப் பொழுது.

[பிராமணர்களுடைய கைகளாகிய மலர்களும் அழகிய குமுதமலர்களும் குவிந்துகொள்ளவும், உலகில் உள்ள சனங்களும் தாமரைகளும் கண்களைத் திறக்கவும், அன்றைய பொழுது, வாசனை வீசுகின்ற தேனையுடைய மாலையுடைய தமயந்தியினது ஆழ்ந்த வருத்தத்தோடு விடிந்தது.]

என்று பாடியிருக்கின்றார். விரகநோயை அதிகப்படுத்துவது இரவுக்காலமாதலால், அவ்விரவு விடிந்தவளவில், தமயந்தியின் துயரமும் தீர்ந்தது என்னுங்கால், பொழுது விடிதல் காரணமும், தமயந்தி துயரம் தீர்தல் அதன் காரியமும் ஆகுந் தன்மையை அறிந்து கொள்வது அருமையன்று. விடிதல் என்னும் சொல்லிற்குப் பொழுதுபுலர்தல், கஷ்டம் நீங்குதல் என்று உள்ள இரண்டு பொருள்களையும் உட்கொண்டு, தமயந்தியின் துயரத்தோடு அற்றைப்பொழுது விடிந்தது என ஒரு சொல்லால் முடிக்கின்றபோது, முதலில் பொழுது விடிதலாகிய காரணமும், பிறகு தமயந்தியின் துயர் தீர்தலாகிய காரியம் நிகழ்ந்திருக்க, அம்முன் பின் காரண காரியத் தொடர்பினை மறைத்து, அவ்விரண்டும் ஒன்றாக நிகழ்ந்தனபோல் கவி, துயரத்

தோடு அற்றைப்பொழுது விடிந்தது எனப் புணர்த்தி விட்டார். காரணகாரியத் தொடர்பினை மறைத்து, அவை யிரண்டும் ஒருங்கியன்ற நிகழ்ச்சிகள்போல் புணர்த்தி நவிலும் திறமையால் இது அழகுற்று உடனிகழ்ச்சி யணி யாகின்றது.

இவ்வுதாரணத்தில், 'விடிந்தது' என்னும் சொல் இருபொருள்பட நின்ற சிலேடையும், 'ஓடு' என்னும் மூன்றும் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருளிற் கமைந்த உருபும், இவ்வணி நேர்வதற்கு உபகாரமாயிருக்கின்றன. இவ்விதமே, ஓடு ஒடு உடன் ஒருங்கு, அனைய சொற்கள்பெற்று இவ்வணி பிறப்பது இயற்கையே. ஆயினும், சிலேடையும் சேரவேண்டுமென்ற அவசியமில்லை. அடர்ந்துவந்த பகைவரை யெல்லாம் வென்று துரத்திய ஒரு அரசனை,

> இகந்த பகைவ ரினத்தொடுவேல் வேந்தே
> திகந்த மடைந்ததுநின் சீர்

[வேலை எந்திய அரசனே, நீ போரில் வென்று கடந்த பகைவரின் கூட்டத்தோடு உன் கீர்த்தியும் திக்குக்களை அடைந்தது]

என்று பாராட்டுங்கால், இவனுக்கு அஞ்சிய பகைவர் திக்குக்களின் எல்லைவரையில் ஓடுவதும், அது காரணமாக இவனுடைய கீர்த்தி எல்லாத் திக்குக்களிலும் பரந்துசென் றடைவதும் பேசபபட்டிருக்கின்றன. பகைவர் தோற்றுத் திக்குக்களை அடைதல் காரணம், இவன் புகழ் திக்குக்களை அடைதல் காரியம். அவ்விரண்டையும், அவைகளிக்கிடையே உள்ள காரண காரியத் தொடர்பினைக் கடந்து புணர்த்தி, அவன் பகைவரும் புகழும் திக்குக்களை அடையும் என அவைஉடன்நிகழ்வனபோல் அழகுற அமைத்தலால் இது உடனிகழ்ச்சியாம். இங்குச் சிலேடையின் உதவி வேண்டப்பெறவில்லை. எனினும், ஓடு என்னும் உருபின் உதவி கொள்ளப்பெற்றிருக்கின்றது.

தமயந்தி நளனுக்கு மாலையிட்டவளவில், ஏனைய அரசர் அவன்மீது போர்கொண்டெழுதலும் நளன் சினமடைந்து அவர்களுடன் போர் இயற்றத் துவக்கியதை,

> வள்ளல்தன் புருவத்தோடு வரிசிலை குனிந்த தன்றே

[நளனுடைய புருவத்துடன் அவனது கட்டமைந்த வில்லும் வளைந்தது]

என்று சிறப்பிக்கும் அதிவீரராம பாண்டியன், புருவம் வளையும்படி நளன் கொண்ட கோபமாகிய காரணத்தையும், அக் கோபத்தால் வில்லைவளைத்தலாகிய காரியத்தையும் ஓடு என்னும் உருபினால் உடனிகழ்ச்சி யாக்கிவிட்டான். இன்னுமொரு உதாரணம் பார்ப்போம்:—

> வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து
> நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த-ஆண்டகையோர்
> மேவல் விரும்பும் பெருநசையால் மெல்லாவி
> காவல் புரிந்திருந்தோர் கண்.

[வேண்டிய உருவத்தை அடைந்து கருகி வெளியில் பரவி நீண்டிருக்கின்ற மேகத்துடன், தம் கணவன்மாரைச் சேரவிரும்பிய பெரிய ஆசையால் தம் மெல்லிய ஆவி போகாதபடி காத்துவைத்திருந்த மாதர்களின் கண்கள் நீரைச் சொரிந்தன]

இதனில், முகிலுடனே கண்கள் நீர் பொழிந்தன என்னும் உடனிகழ்ச்சி உரைக்கப் பெற்றிருக்கின்றது. "கார்காலம் வருமளவில் யான் மீள்வேன்" எனப் பருவங் கூறிப் பிரிந்துள்ள காதலனின் வரவு நோக்கிக் காத்திருக்கும் மனைவி, மேகம் பொழிவது கண்டு, 'கார்காலம் வந்தும் என் நாயகன் வந்திலனே' என்னக் கலுழ்கின்றாள். மழைபெய்தல் காரணம், இவள் கண்கள் நீர் சொரிதல் காரியம். முதலில் மழைபொழிய அதுகண்ட காரிகை, வாராத தன் நாயகனை நினைந்து வருந்துகின்றாளாயினும், அவையிரண்டும் ஒருங்கே நிகழ்வனவாக, ஓடு என்னும் உருபின் உதவிகொண்டு, இங்குக் கூறப்பெற்றிருக்கின்றன.

இச் செய்யுளின் முதலிரண்டு அடிகள், கண்ணிற்கும் முகிலிற்கும் சிலேடையாக அமைந்திருக்கின்றன. வேண்டிய உருவத்தை எடுத்துக்கொண்டு கருநிறமாகி ஆகாயத்தில் பரந்து சென்று பெரியதாயிருக்கின்ற முகில் என்று மேகத்திற்கும், எல்லோராலும் விரும்பக்கூடிய வடிவுடையனவாகி, மையிட்டுக் கருத்து, வெண்மையுடன் நீண்ட கண்கள், எனக் கண்ணிற்கும் பொருந்தும்படி பொருள் கூறலாம். இச்செய்யுளில் இப்படிச் சிலேடை யிருக்கின்றதேனும் அந்தச் சிலேடை செய்யுளைச் சுவைசெய்கின்றதே யன்றி (துயரத்தோடு அற்றைப்பொழுது விடிந்தது, என்ற உதாரணத்திற்போல) உடனிகழ்ச்சியணி பிறப்பதற்கு உதவியாய் நிற்கவில்லை.

> பூங்காவிற்புள்ளொடுங்கும்புன்மாலைப்போழ்துடனே
> நீங்காத வெம்மையவாய் நீண்டனவாற்-றூங்காதல்
> வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி
> யுய்க்குந் தமியோ ருயிர்ப்பு.

[பூஞ்சோலையில் பறவைகள் ஒடுங்கும் அற்ப மாலைக் காலத்துடன், தாம் காதல்வைத்திருக்கும் துணைவர் வரும் காலம் பார்த்து உயிரைச் சுமந்து கழிக்கும் மாதர்களின் பெருமூச்சுக்களும், தணியாத வெப்பமுடையனவாய் மிக்க நீண்டனவாயிருந்தன]

மாலைக்காலம் நீளநீள, தனியாயிருந்த மாதர்களின் நெட்டுயிர்ப்பும் நீண்டு நீண்டு வந்தன என்னுங்கால், பிரிந்திருந்தாரை வருத்தும் மாலை நீள்வது காரணமும், மாதர் உயிர்ப்பு நீளுதல் அதன் காரியமும் ஆகின்றன. இவ்விரண்டும் ஓடு என்னும் உருபினால் உடன்நிகழ்ச்சியாகத் தோன்றும். "நீங்காத வெம்மையவாய் நீண்டன" என்பது ஒரு பொருளில் மாலைக்காலத்திற்கும் வேறொரு பொருளில் மாதரார் பெருமூச்சிற்கும் பொருந்தி, இவ்வணிக்குஉபகாரம் செய்கின்றது.

> பொங்குகதிர் வெய்யோன் புறந்தர வேர்விழுந்த
> கங்குலுடனே யிருண்ட காட்சித்தே—யெங்க
> ளருளாளன் வேங்கடவ னம்புயத்தார் வேட்டு
> மருளா தரித்தாள் மனம்.

[பொங்குகின்ற கிரணங்களையுடைய சூரியன் போய் விடவே, திணிந்து ஊன்றிய இரவினுடன், எங்கள் அருளாளனாகிய வேங்கடவனுடைய அழகிய புயத்தில் அணிந்த மாலையை ஆசைப்பட்டு மையல் கொண்டவளின் மனம், இருண்ட தோற்றத்தையுடையதாகி இருக்கின்றது.]

கங்குல் இருண்டது காரணம், அதன் காரியம் இவள் மனத்தில் இருண்ட மருள். உடன் என்னும் உருபினால் இவை இரண்டும் ஒன்றாய் நிகழ்த்தப் பெறுகின்றன.

> அந்தணரா யந்த முணர்வா ரிதயார
> விந்தமுட னேமலரு மேன்மைத்தே—பைந்துளப
> மாலைப் பெருமானே வான்பிரம மென்னுமகிழ்
> மாலைப் பெருமான்செவ் வாய்.

[அந்தணராகி வேதாந்தத்தைஉணர்கின்றவர்களுடைய இருதயமாகிய தாமரையுடன், பசுமையான துளபமாலையணிந்த திருமாலே சிறந்த பரபிரம்மம் என்றுகூறுகின்ற மகிழமாலையணிந்த சடகோபரது சிவந்தவாய், மலர்கின்ற மேன்மையுடையது]

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளினால் அதனைக் கேட்ட அந்தணர்களுடைய இதயங்கள் மலரும். ஆழ்வார் வாய்மலர்தல் காரணம், அந்தணர் இதயம் மலர்தல் அதன் காரியம். அவையிரண்டும் ஒன்றாய் நிகழ்த்தப் பெறுகின்றன.

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

விநோத விவாக ரத்து:—அமெரிக்கா இல்லிநாய் நகரில் கார்ல்ஸன் என்ற கிழவர் தமது மனைவி இடா என்பவள் தம்மைக் கவனிப்பதே யில்லை யென்று குறைகூறிவந்தார். சமீபத்தில் அவர் வீட்டில் நடந்த விருந்து ஒன்றில் தமக்கு அவள் கோழிக்குஞ்சுக் கறி வைக்கவே யில்லையாம். மற்றவர்களுக் கெல்லா ஏராளமாக வைத்தும் தமக்கு மட்டும் அது வைக்காமல் வேண்டுமென்றே விருந்தாடிகளின் முன்னே தம்மை அவமானம் செய்தாளென்று கூறி விவாகரத்து செய்துகொண்டார்.

*   *   *

சிறுவன் பேரன்பு:— காலிபோர்னியாவில் ஹோமர்லீ யென்ற 14-வயதுச் சிறுவன் குழந்தை முதலே ஒருநாயைப் பெரிதும் அருமையாகப்போற்றி வளர்த்து வந்தான். சென்ற மாதத்தில் அது கிழத் தன்மையால் இறந்துபோயிற்று. தன் குழந்தைத் தோழன் இறந்தது கண்ட ஹோமர்லீ துயரம் பொறுக்கமுடியாமல், அந்த நாயின் அருகிலேய ஒரு துப்பாக்கியால் தற்கொலை செய்துகொண்டான். "எனது அருமைத் தோழன் இனித் திரும்பி வரமாட்டான், நானும் வரமாட்டேன். நாங்கள் இல்லாமலே உலகம் நடைபெறும்" என்று அவன் ஒரு சீட்டு எழுதி வைத்திருந்தான்.

**Indo-Commercial Bank, Ltd.,**
**Mayavaram.**
Capital, Reserves, etc., as at 31st December 1935 : Rs. 11,14,741.
*BRANCHES :—*
*Madras Office :—*
**107, Armenian Street.**
*Bazaar Branch :—*
**260, China Bazaar Road.**
Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.
*SUB OFFICES:—*
Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.
*All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.*
**S. N. N. SANKARALINGA IYER.**
*Managing Director,*
**107, Armenian Street, Madras.**

நெடிய காதல்:-போர்ச்சுகல் தேசத்தில் கப்ரியேல் என்ற வாலிபனும், பெர்னுடா என்ற பெண்ணும் குழந்தை முதல் பழகியவர்கள். அவர்களுக்கு வயது வந்தபொழுது இருவரும்கணவன் மனைவியாகவிரும்பினார்கள். ஆனால் பெண்ணுக்குப் பையனைவிட மூன்று வயது அதிகமாக இருந்ததினால் பெற்றோர்கள் கலியாணம் கூடாதென்று மறுத்துவிட்டார்கள். அதனால் இவர் வாழ்க்கையும் வேறாயிற்று. இது அறுபதாண்டுகளுக்கு முந்தியசெய்தி. சென்ற ஆண்டில் அவர்கள் இருவரும் சந்தித்தார்கள். கப்ரியேல் மனைவியை இழந்தவராயும், பெர்னுடோ புருஷன் இழந்த விதவையாகவும் இருந்தார்கள். அவருக்கு ஒரு பையனும், அவளுக்கு ஒரு பெண்ணும் இருந்தனர். பிள்ளைக்கும் பெண்ணுக்கும் விவாகம் செய்தார்கள். இதனால் பழக்கம் மிகுதியாகவே பெற்றோர்களுக்கு இளமையில் தோன்றியிருந்த காதல் திரும்பவும் தோன்ற மறுவிவாகம் செய்துகொண்டார்கள். கப்ரீயேலுக்கு வயது எழுபத்திரண்டு, பெர்னுடோவுக்கு எழுபத்தைந்து. அவர்கள் கலியாணத்தில் அவர்கள் பிள்ளையும் பெண்ணுமே தோழனும் தோழியுமாயிருந்தார்கள்.

*   *   *

மாக்ஸ் ஸ்மித் என்பவர் இருபது வயதில் 13 வயதுள்ள ஜென்னியைக் கலியாணம் செய்ய விரும்பினார். ஆனால் இருவர் வாழ்க்கையும் விதியின் கதியால் வேறு வகையாக முடிந்தது. சமீபத்தில் இருவரும் ஒருவர் மனைவியை இழந்தவராகவும், மற்றவர் விதவையாகவும் சந்தித்தனர். இருவருக்கும் கலியாயாணம் முடிந்துவிட்டது. மார்க்ஸ் ஸ்மிதுக்கு வயது எண்பது; ஜென்னிக்கு எழுபத்து மூன்று.

*   *   *

மாய மனிதன்:-இவான் ஸ்லெக் என்ற ருஷியாக் காரனைக் கைதுசெய்து செக்கோ ஸ்லோவியா நாட்டுப் போலீசார் பல முறை படம்பிடிக்க முயன்றும் காமிராவில் படம் விழவில்லையாம். அதன் ரகசியத்தை அவன் சொல்ல மறுக்கிறானம்.

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**
இனும்! **" காம சாஸ்திரம் "** இனும் !!
**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
**26 பிராட்வே, மதராஸ்.**

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட. ச்யாவனப்ராசா — ம.ட. பிருங்காமலக தைலம் — கோரோஜனை மாத்திரை
**நஞ்சன்கூடு பல்பொடி**
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட. ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிறுமணக்கு எண்ணெய் **காஸ்ட்ராலகஸ்**
**ஜ்வரேக்**
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)